அருள்மிகு ஸ்ரீ கைலாசநாதர்

அம்மன்குடி

ஸ்ரீ துர்க்கா - பரமேஸ்வரி திருக்கோவில்

கும்பகோணம் தாலுக்கா, தஞ்சாவூர் ஜில்லா.

SHRI KAILASANATHAR-DURGA PARAMESWARI

TEMPLE - AMMANGUDI

KUMBAKONAM TALUQ, TANJORE DISTRICT

மஹா கும்பாபிஷேக மலர்

(30-4-1986)

ஸ்ரீ அம்மன்குடி ஆலயத்தில் உள்ள விநாயகர்

सदा बालरूपाऽपि विघ्नाद्रि हन्त्री
महा दन्दि वक्त्रापि पञ्चास्य मान्य
विधीन्द्रादि मृग्या गणेशापि धामे
विधत्ताम साय काऽपि कल्याणमूर्तिं :

ஸதா பாலரூபாபி விக்னுத்ரி ஹந்தரி
மஹாதந்தி வக்தராபி பஞ்சாஸ்யயன்யா
விதீந்த் ராதிம்ருக்யா கணேசாபிதாமே
விதத்தாம் ஸாயம் காபி கல்யாண மூர்த்தி:

ஸ்ரீ விக்னராஜாயா நம :

ஸதா பாலரூபாபி விக்னாத்ரி ஹந்த்ரீ
மஹா தந்திவக்த்ராபி பஞ்சாஸ்யமான்யா
விதீந்த்ராதிம்ருக்யாகணேசா பிதாமே
விதத்தாம் ஸ்ரியம் காபி கல்யாண மூர்த்தி:

सदा बालरूपापि विघ्नाद्रिहन्त्री
महादन्तिवक्त्राऽपि पञ्चास्यमान्य ।
विधीन्द्रादिमृग्या गणेशाभिधामे
विधत्तां श्रियं काऽपि कल्याणमूर्तिः ।।

ஸங்கஷ்ட நாசன கணேச ஸ்தோத்ரம்

(ஸர்வ கார்யஸித்தி, வித்யை, தனம், சத்புத்ரன், மோக்ஷம், முதலிய லாபங்கள் உண்டாவதோடு மிக கஷ்டமாகிய கடன், வியாதி, மகத்தான பயம் முதலியவைகள் நீங்கும்)

(ஸ்ரீ கணேசாய நம : நாரத உவாச

ப்ரணமய சிரஸா தேவம் கௌரீபுத்ரம் விநாயகம் ।
பக்தாவாஸம் ஸ்மரேந்நித்யமாயு : காமார்த்தஸித்தயே ।।
ப்ரதமம் வக்ரதுண்டம் ச ஏகதந்தம் த்வதீயகம் ।
த்ருதீயம் க்ருஷ்ணபிங்காக்ஷம் கஜவக்த்ரம் சதுர்த்தகம் ।।
லம்போதரம் பஞ்சமம் ச ஷஷ்டம் விகடமேவ ச ।
ஸப்தமம் விக்னராஜம் ச தூமரவர்ணம் ததாஷ்டகம் ।।
நவமம் பாலசந்திரம் ச தசமம் து விநாயகம் ।
ஏகாதசம் கணபதிம் த்வாதசம் து கஜாநநம் ।।
த்வாதசைதானி நாமாநி த்ரிஸந்த்யம் ய படேந் நர : ।
ந ச விக்னபயம் தஸ்ய ஸர்வ ஸித்திகரம் ப்ரபோ : ।।
வித்யார்த்தீ லபதே வித்யாம் தநார்த்தி லபதே தனம் ।
புத்ரார்த்தீ லபதே புத்ரான் மோக்ஷார்த்தீ லபதே கதிம் ।।
ஜபேத் கணபதிஸ்தோத்ரம் ஷட்பிர்மாஸை : பலம் லபதே ।
ஸமவத்ஸரேண ஸித்திம் ச லபதே நாத்ர ஸம்சய ।।
அஷ்டபயோ ப்ராஹ்மணேப்யச்ச லிகித்வா ய : ஸமர்பயேத் ।
தஸ்ய வித்யா பவேத் ஸர்வா கணேசஸ்ய ப்ரஸாதத : ।।

—ஸங்கஷ்ட நாசனம் நாம கணேச ஸ்தோத்ரம் ஸம்பூர்ணம்

SRI CHANDRAMOULEESWARAYA NAMAHA

SRI SANKARA BHAGAVADPADACHARYA PARAMPARAGATHA

His Holiness Sri Kanchi Kamakoti Peetadhipathi

JAGADGURU SRI SANKARACHARYA SWAMIGAL

SRIMATAM : : SAMASTHANAM,

KANCHEEPURAM-631 502

Camp : வாரணசி Date : 16-4-86

ஒவ்வொரு கிராமங்களில் சிவன் கோவில், பெருமாள் கோவில், கிராம தேவதை கோவில்கள் பழங்காலம் முதல் இருந்து வருகின்றன. இந்தக் கோவில் மூர்த்திகளெல்லாம் ஜனங்களுக்கு வியாதிகள் போக்குவது, நினைத்த காரியத்தை முடித்துக் கொடுப்பது. முக்தியளிப்பது வரை எல்லாவித அருளையும் அருள்பாலித்து வருகிறது. கிராம, நகரத்து ஜனங்களுடைய நன்மைக்காக ஏற்பட்டது கோவில்கள், தற்போது கிராமங்களில் பல கோவில்கள் ஜீர்ணோத்தாரண நிலையில் இருக்கிறது. கும்பகோணம் தாலுக்கா அம்மன்குடி ஸ்ரீ துர்க்கா பரமேஸ்வரி ஸபரிவார ஸஹித ஸ்ரீ பார்வதி தேவி, ஸ்ரீ கைலாஸநாதஸ்வாமி கோவில் மஹா கும்பாபிஷேகம் நடக்க இருப்பதைக் கேட்டு சந்தோஷிக்கிறோம். எல்லா ஆஸ்தீக அன்பர்களும் இதில் பங்கு கொண்டு பொருளுதவி செய்து கும்பாபிஷேகம் செய்வித்து ஸ்ரீ பகவானுடைய அருளுக்குப் பாத்திரராகும்படி ஆசீர்வதிக்கிறோம்.

நாராயண ஸ்ம்ருதி :

ஸ்ரீ துர்கா பரமேஸ்வரி

அம்மன்குடி

सर्वस्वरूपे सर्वेशे सर्वशक्ति-समन्विते ।
भयेभ्यस्त्राहि नो देवि दुर्गे देवि नमोस्तु ते ।।

ஸர்வஸ்வரூபே ஸர்வேச ஸர்வ - சக்தி - ஸமன்விதே ।
பயேப்ப்யஸ் - த்ராஹி நோ தேவி துர்க்கே தேவி நமோஸ்துதே ॥

காஞ்சி காமகோடி பீடம் பரமாசார்யாள் அருளிய

துர்கா பஞ்சரத்ணம்

श्रीदुर्गापञ्चरत्नस्तोत्रम्

ते ध्यानयोगानुगता अपश्यन् त्वामेव देवीं स्वगुणैर्निगूढाम् ।
त्वमेव शक्तिः परमेश्वरस्य मां पाहि सर्वेश्वरि मोक्षदात्रि ॥ १ ॥

தே த்யானயோகானுகதா அபச்யன்
த்வாமேவ தேவீம் ஸ்வகுணேர் நிகூடாம் |
த்வமேவ சக்தி : பரமேச்வரஸ்ய
மாம் பாஹி ஸர்வேச்வரி மோக்ஷதாத்ரி ||

தன்னுடைய குணங்களாலேயே மறைந்திருக்கக்கூடிய பராசக்தியான உன்னே, யார் த்யானயோகத்தை அடைந்துள்ளார்களோ அவர்களே காண்கின்றனர். ஏ ! தேவி ! நீ தான் பரமேச்வரனுடைய சக்தியாகின்ருய்; ஏ ! தேவி ! மோக்ஷத்தைக் கொடுப்பவளே ! ஸர்வேச்வரி; என்னைக் காப்பாற்றுவாயாக.

देवात्मशक्तिः श्रुतिवाक्यगीता महर्षिलोकस्य पुरः प्रसन्ना ।
गुहा परं व्योम सतः प्रतिष्ठा मां पाहि सर्वेश्वरि मोक्षदात्रि ॥ २ ॥

தேவாத்மசக்தி : ச்ருதிவாக்யகீதா
மகர்ஷிலோகஸ்ய புர ப்ரஸன்ஞ |
குஹா பரம் வ்யோம ஸத : ப்ரதிஷ்டா
மாம் பாஹி ஸர்வேச்வரி மோக்ஷதாத்ரி ||

ஏ ! தேவி ! ச்ருதி வாக்யங்களாலே புகழப் படுகின்ற தெய்வசக்தியும் ஆத்ம சக்தியும் நீயே. மகரிஷி மண்டலங்களுக்குப் பிரத்யக்ஷமாகின்றவளும் நீயே. நீ பரம ரஹஸ்யமான பொருள் ; நீயே எங்கும் பரவி இருப்பவள். நீயே தான் உலகத்தை நிலைக்கச் செய்பவள். ஏ ! பராசக்தி ! ஸர்வேச்வரி ! மோக்ஷத்தைக் கொடுப்பவளே ! என்னைக் காபாற்றுவயயாக.

पराऽस्य शक्तिः विविधैव श्रूयसे श्वेताश्ववाक्योदितदेवि दुर्गे ।
स्वाभाविकी ज्ञानबलक्रिया ते मां पाहि सर्वेश्वरि मोक्षदात्रि ॥ ३ ॥

பராஸ்ய சக்தி : விவிதைவ ச்ரூயஸே
ச்வேதாச்வ வாக்யோதித தேவி துர்க்கே |
ஸ்வாபாவிகீ ஞானபலக்ரியா தே
மாம் பாஹி ஸர்வேச்வரி மோக்ஷதாத்ரி ||

நீ பரப்ரும்மத்தின் உயர்ந்த பல்வேறு பட்ட சக்தியாகப் புகழப்படுகின்றாய். ஏ! துர்காதேவி! நீயே ச்வேதாச்வதா உபநிஷத் ப்ரதிபாத்யமான வஸ்து. உனக்கு ஞானமும், பலமும், செயலும் ஆகிய எல்லாம் இயல்பானவையே. ஏ! பராசக்தி! மோக்ஷத்தைக் கொடுப்பவனே! என்னைக் காப்பாற்றுவாயாக.

देवात्म शब्देन शिवात्मभूता यत्कूर्मवायव्यवचोविवृत्या ।
त्वं पाशविच्छेदकरी प्रसिद्धा मां पाहि सर्वेश्वरि मोक्षदात्रि ॥ ४ ॥

தேவாத்மசப்தேன சிவாத்மபூதா
யத்கூர்மவாயவ்யவசோவிவ்ருத்யா ।
த்வம் பாசவிச்சேதகரீ ப்ரஸித்தா
மாம் பாஹி ஸர்வேச்வரி மோக்ஷதாத்ரி ॥

கூர்ம புராண, வாயவ்ய புராண வசனங்களிலே நீ 'தேவ' என்ற சொல்லாலும் ஆத்மா என்ற சொல்லாலும் பரசிவப்பொருளுக்கு ஆத்மாவாய்இருக்கின்றாய். நீ பந்தபாசங்களைப் போக்குகின்றவள் என்று ப்ரசித்தி அடைந்துள்ளாய். ஏ ! தேவி! ஸர்வேச்வரி ! மோக்ஷத்தைக் கொடுப்பவளே ! என்னைக் காப்பாற்றுவாயாக.

त्वं ब्रह्मपुच्छा विविधा मयूरी ब्रह्मप्रतिष्टाऽस्युपदिष्टगीता ।
ज्ञानस्वरूपाऽऽत्मतयाऽखिलानां मां पाहि सर्वेश्वरि मोक्षदात्रि ॥ ५ ॥

த்வம் பிரும்மபுச்சா விவிதா மயூரீ
ப்ரும்ம பரதிஷ்டாஸ்யுபதிஷ்ட கீதா !
க்ஞானஸ்வருபாத்மதயாகிலானும்
மாம் பாஹி ஸர்வேச்வரி மோக்ஷதாத்ரி ॥

ஏ ! தேவி : நீ எல்லாப் பொருளுக்கும் ஞான வடிவான ஆத்மாவாய் இருப்பதனால் பிரும்மத்தை நிலையாக -உடையவளாகவும்; கீதையை உபதேசம் செய்தவளாகவும் பரம்பொருளையே தோகையாகக் கொண்ட வண்ணமயிலாகவும் இருக்கின்றாய். ஏ ! தேவி! ஸ்ர்வேச்வரி! மோக்ஷத்தைக் கொடுப்பவளே ! என்னைக் காப்பாற்றுவாயாக.

வ்யுத்பன்னர்களிடத்தில் கொடுத்து தாத்பர்யம் புரிந்து தேவியிடம் மனம் செலுத்தி ஸர்வமங்களங்களையும் ஜன்ம ஸாபல்யத்தையும் அடைய

ப்ரார்த்தனை
சுபம்

உ

ஸ்ரீ துர்காதேவி துணை

திருப்பணி அறிக்கை

ஸ்ரீ மஹிஷாஸுாமாதினிபாய் விளங்கும் ஸ்ரீ துர்காதேவியால் பிரதிஷ்டை செய்யப்பட்ட ஸ்ரீ கைலாச நாதா, பார்வதி, விநாயகர் சூர்யன் சன்னதிகளுள்ள ஸ்ரீ கைலாசநாதர் கோயில் என புகழ்பெற்ற இக்கோயிலின் திருப்பணி பல வருஷங்களுக்குப் பிறகு ஆரம்பிக்கப்பட்டது. சென்னை HRCE ஆணையரின் அங்கீகாரம், 24688 dt. 21--8-80 ஷி கும்பகோணம் உதவி ஆணையரின் No. 56531/80 Dt. 26-8-80 அனுமதியின்படி திருப்பணிக் கமிட்டி நிறுவப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு :

போஷகர்	ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் ஸ்ரீ காசிமடம்—திருப்பணந்தாள் 612504
தலைவர்	திரு. சேதுராமன் பாணுதுரை கும்பகோணம்
உபதலைவர்கள்	திரு. கும்பா RMN பார்த்தசாரதி திருபுவனம். திரு N. சேதுராமன் B Sc DMIT கும்பகோணம்
செயலாளர்	திரு K V ராஜகோபாலய்யர், காமாக்ஷிபுரம்
பொருளாளர்	செயல் அலுவலர் ஸ்ரீனிவாஸ. பெருமாள் தேவஸ்தானம் நாச்சியார் கோயில் 1. திருTC மோஹன் கிருஷ்ணன் 2. திரு R ஜயசந்திரன்

கமிட்டி அங்கத்தினர்கள்

1. கலியமூர்த்தி அம்மன்குடி நிர்வாக அறங்காவலர்
2. A. சண்முகம் விளங்குடி அறங்காவலர்
3. G. பெரியசாமி அம்மன்குடி அறங்காவர்
4, S. நாகநாத அய்யர் கட்டாநகரம் உறுப்பினர்
4. R. இராஜகோபால் அம்மன்குடி ,,
6. K, N. கிருஷ்ணமூர்த்தி கும்பகோணம் ,,
7. S. ராமு, அம்மன்குடி ,,
8. S. ராமதுரை காமாட்சிபுரம் ,,
9. V. ராகவன், கும்பகோணம் ,,
10. V. ராமசுப்ரமணியம், சென்னை ,,
11. M. ராமசாமி, சென்னை ,,
12. N. ஸ்வாமிநாதன், சென்னை ,,

13. P. M. குப்புசாமி அய்யர், புளியஞ்சேரி உறுப்பினர்
14. P. மகாலிங்கம், அம்மன்குடி ,,
15. G. நாகராஜன், விளங்குடி ,,
16. M. கருணை வடிவேல், அம்மன்குடி ,,
17. V. கிருஷ்ணமூர்த்தி, புளியஞ்சேரி ,,
18. K. தங்கராசு அம்மன்குடி ,,
19. K. லெக்ஷ்மணன், அம்மன்குடி ,,

திருப்பணி காலத்தில் கும்பகோணம் உதவி ஆணையர்களாக இருந்தவர்களின் விபரம் :-

1. திரு. S P முனுசாமி
2. திரு. S மகாராஜன்
3. திரு. N சுவாமிநாதன்
4. திரு, மு. க. முருகேசன்
5. திரு. வை. சுப்பய்யன்
6. திரு N. சீதாராமன்
7. திரு. ஷண்முக சுந்தரம்

உதவி கோட்ட பொறியாளர்கள்

1. திரு. S முத்துசாமி B E
2. P குப்பண்ணன் B E

இள நிலைபொறியாளர்

1. திரு. R கணேசன்
2. திரு S V சப்தரிஷி

ப்ரதான சிவாச்சார்யார்கள்

1. சிவ ஸ்ரீ V மணிகுருக்கள்
2. சிவ ஸ்ரீ V அய்யாசாமி குருக்கள்

கார்ய ஸித்திகர ஸ்ரீ மஹாகணபதி ஸ்தோத்ரம்

(எல்லா விக்னங்களையும் போக்கக்கூடிய கணபதியின் 16 நாமாக்களை நம்பிக்கையுடன் ஜபிக்க ஸர்வ கார்யஸித்தி ஏற்படும்)

ஸுமுகச்சைகதந்தச்ச கபிலோ கஜகர்ணக : |
லம்போதரஸ்ச விகடோ விக்ன ராஜோ விநாயக : ||
தூமகேதுர்கணாத்யக்ஷோ பாலசந்த்ரோ கஜானன |
வக்ரதுண்டச்சூர்பகர்ணோ ஹேரம்பஸ் ஸ்கந்தபூர்வஜ : ||
அஷ்டாவஷ்டௌ ச நாமாநி யபடே ச்ருணுயாதபி |
வித்யாரம்பே விவாஹேச ப்ரவேசே நிர்கமே ததா ||
ஸம்க்ராமே ஸர்வகார்யேஷு விச்நஸ்தஸ்ய ந ஜாயதே ||

நன்றியுரை

இத்திருப்பணி ஆகஸ்டு 80 ல் ஆரம்பிக்கப்பட்டு திருப்பணி வேலைகள் கணக்கற்ற ஆஸ்தீக நண்பர்கள் தானே முன் வந்து செய்த பண உதவியாலும் ஊக்கத்தாலும் HRCE அலுவலகத்தின் கமிஷனர், அவருடைய நேர்முக உதவியாளர்கள், மற்ற அலுவலர்கள், கும்பகோணம் உதவி ஆணையர்கள், அவர் உதவியாளர்கள், கோட்ட இளநிலை பொறியாளர்கள், செயலர்கள் ஆகியோர்களின் ஒத்துழைப்பாலும் ரூ 4 லக்ஷத்திற்கு கூடுதலான சிலவில் திருப்பணி முடிவடைந்தது.

30-4-'86 துர்காதேவி அருளால் கும்பாபிஷேகமும் மிகச் சிறந்த முறையில் முடிவடைந்தது. திருப்பணிக்கு சர்க்கார் மானியமாக ரூ 50,000 பெறப்பட்டது. இரண்டாம் தவணையாகவும் ரூ 40,000 அனுமதிக்கப்பட்டுள்ளது.

இந்த திருப்பணிக்கு நன்கொடை அளித்தவர்களுக்கும் கும்பாபிஷேகத்திற்கு நன்கொடையளித்தவர்களுக்கும் மற்றும் பலவகைகளில் உதவியும் ஊக்கமும் அளித்தவர்களுக்கும் கமிட்டியின் நன்றியுடைத்ததாகும். எல்லோருடைய பெயர்களையும் குறிப்பிடுவது செயற்பாலது அல்ல. அதில் சிலருடைய பெயர்களை மட்டும் அவர்களின் முக்கிய சேவைகளைக் கருதி குறிப்பிடுவதை அவர்களே விரும்பாததாலும் அது தவிர்க்கப்பட்டது.

இந்தியன் பாங்க் நிறுவனத்தினர் இந்தத் திருப்பணிக்காக கொடுக்கப்படும் காசோலைகள் M. T. ஆகியவற்றை கமிஷன் இல்லாமல் கணக்கில் சேர்க்க உதவியது முக்கியமாகக் குறிப்பிடவேண்டிய ஒன்றாகும்.

இத் திருப்பணிக்கு கொடுக்கப்படும் நன்கொடைகளுக்கு I.T.Act 80(g) பிரிவின்படி வருமானவரி விலக்கு அளித்ததற்காக இந்தியா கவர்ன்மெண்டுக்கு நம் நன்றி.

கும்பகோணத்தில் இத்திருப்பணியை முன்னிட்டு மிகக் குறைந்த கால அளவில் கேட்டுக்கொள்ளப்பட்டும் பிரவசனம் செய்த திப்பி ராஜபுரம் பிரம்மஸ்ரீ P. N. ராமமூர்த்தி தீக்ஷிதருக்கு நம் நமஸ்காரங்கள்.

மிக முக்கியமாக திருப்பணிக்காக Donation Ticketகளை இலவசமாக அச்சடித்து உதவிய M/S Paper N Pack, Nungambakkam நிறுவனத்தாருக்கு நம் மனமார்ந்த நன்றிகள்.

ஸ்ரீ அம்மன்குடி துர்கா பரமேஸ்வரி

இறைபணி மன்றம்

30-3-86 அன்று சென்னையில் நடந்த அம்மன்குடி துர்கா பக்தர்களின் சென்னை அமைப்பின் (Madras Chapter) கூட்டத்தில் ஸ்ரீ அம்மங்குடி துர்கா பரமேஸ்வரி இறைபணி மன்றம் என்னும் பெயரில் ஓர் அமைப்பு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டு அமைக்கப்பட்டது.

இதன் தலைவர் திரு. M. ராமசாமி சென்னை

உப தலைவர் 1. திரு. S. சேதுராமன் கும்பகோணம்

2. திரு. N. சுவாமிநாதன் சென்னை

செயலாளர் திரு. V. ராமசுப்ரமணியன் சென்னை

பொருளாளர் திரு. K. விஸ்வநாதன் சென்னை

இந்தக்கமிட்டின் முக்கியமாக கும்பாபிஷேக மலர் வெளியிடுவதையும் தொடர்ந்து அம்மன்குடியில் இறைபணியில் ஈடுபடுவதையும் அம்மங்குடி ராமர் கோயில் திருப்பணி ஆரம்பிக்க ஆவன செய்வதையும் தற்சமயம் கவனிக்கும்.

SOUVENIR COMMITEE

1) Shri M. Ramaswamy
2) ,, V. Ramasubramanyan
3) ,, G. S. Gowri Sankar
4) ,, K. V. Krishnamurthy
5) ,, K. Viswanathan

நிர்வாக உறுப்பினர்கள் :

1. ஸ்ரீ K. V. ராஜா கோபாலன்
2. ,, L. கௌரிசங்கர்
3. ,, M. குப்புசாமி
4. ,, M. ஷண்முகம்
5. ,, K. V. கிருஷ்ணமூர்த்தி
6. ,, K. R. ராஜா கோபால கிருஷ்ணன்
7. ,, R. ராஜா கோபாலன்
8. ,, R. ரமணி
9. ,, S. வாஞ்சிநாதன்
10. ,, V. பார்த்தசாரதி
11. ,, V. கிருஷ்ணமூர்த்தி
12. ,, கணேச அய்யர்
13. ,, K. N. கிருஷ்ணமூர்த்தி

SRI KAMAKOTI TIRUVENI

கும்பாபிஷேக தத்துவம்

11வது ஆகமசில்ப வியாச பாரத மஹாநாடு, காஞ்சிபுரம்

மலர் 72—73

கும்பாபிஷேகம் : குடத்து நீராட்டல், இறைவன் அருள் ஒளி பேரொளி ஆகி, அன்பர்களுக்கெல்லாம் பயன்தரச் செய்யும் மாபெரும் செயல். அவனது அருள் பெற்று, இறை காட்டியருளிய ஆகமவழி நின்று முக்கரணமும் ஒன்றிசைந்து முற்பிற்பாடு முறை தவருமல், அருள்பெறச் செய்வது, செய்விப்பது, உரிய ஸாதனங்கள் அமைப்பது ஆகிய எல்லாம் சிவாகமச்செயலில் இன்றயமையாதது. அதன் முன் பின் அங்கச் செயல்கள் பல விடைபெறல், விநாயகர் வழிபாடு வகை முதல் மண்டல பூர்த்தி இறுதியாகும், இடையில் அதிவாஸம் அல்லது யாக ஆரம்பம், அவபிருதம் அல்லது குடமுழுக்காட்டல் என்பது முக்கியம். எஞ்சியது கௌனம், யாகாரபம்பத்துக்கு ஆசார்ய தியமனம் உபவாஸம், அங்குரபூஜை, ரக்ஷாபந்தனம், நித்திய விசேஷஸந்தி தர்ப்பணங்கள், கும்ப அலங்காரம், கலாகர்ஷணம், யாத்ரா ஹோமம், யாக சாலாப் பிரவேசம் இவை யாகாரம்ப தின மாலை தொடங்கி யாக பூர்த்தி செய்யவிருக்கிறது, யாகம் ஏழு ராத்திரி ஐந்து ராத்திரி, மூன்று ராத்திரி, ஒரு ராத்திரி, அப்போதைக் காலம் என்று உசிதம்போல் செய்ய விதி இருக்கிறது. யாக பூர்த்தி அவபிருத தின காலை வேளையில் முடித்து, யாத்ரா தானம், கலாசோத்தாபனம் முதலியன செய்து, அபிஷேகம், செய்யவிருக்கிறது. யாக மத்தியில் ஆகார சோதனம், அஷ்டபந்த ஸமர்ப்பணம், சாந்தி ஹோமம், பிம்ப சுத்தி, ரக்ஷாபந்தனம், ஜீவந்யாஸம், ஸ்பரிசாஹுதி யாவும் அதிவாஸபூர்த்திக்குள் செய்யவிருக்கிறது. இதில் ஆவர்த்தம், புனராவர்த்தம், அநாவர்த்தம், அந்தரிதம் எனப் பிரதிஷ்டை நான்கு வகையுடைத்து.

ஆவர்த்தம் : என்னும் பிரதிஷ்டை முதலில் பாலஸ்தாபனம் செய்து. புதிதாக ஆலய நிர்மாணம் செய்து, பால மூர்த்தியிலிருந்து மூலஸ்தான உள்ளுறையில் சேர்ப்பது. **புநராவர்த்தம் :** என்பது, பழைய ஆலயம் ஜீர்ணமடைந்து, பிராகாரம் கோபுரம் முதலியவை பழையனவாகி, அஷ்டபந்தன மருந்தின் நீக்கத்தால் தோஷமுற்று, நித்தியபூஜை முதலிய வழிபாடுகள் செய்விக்க இயலாத நேரம், உள்ளுறையின் சக்தியை ஆகர்ஷித்து, பாலாலயத்தில் மூர்த்தியில் ஆரோபணம் செய்து, ஆலயத் திருப்பணிகளைச் செய்வித்து, பிறகு பாலமூர்த்தியிலிருந்து உள்ளுறையில் சேர்ப்பது. இதில் அஷ்டபந்தனம் என்பது, இறைவன் அம்சமாகிய அஷ்டமூர்த்தியின் அருள்பெற்று, அணிமாதி அஷ்டைச்வர்யமும் ஸித்தியடைந்த நிலையில் ஞானக்ரியா சக்தியாகும் சங்கநிதி பத்மநிதி இரண்டும் தோன்றி பரம்பொருளின் ஆணையால், ஸாம்ராஜ்ய லக்ஷ்மியும், அதிலிருந்து பயன் தரும் வகையில், தன லக்ஷ்மி, தான்யலக்ஷ்மி, வித்தியா லக்ஷ்மி, கீர்த்தி லக்ஷ்மி, ஸௌபாக்ய லக்ஷ்மி, ஸந்தான லக்ஷ்மி,

வீர லக்ஷ்மி, ஜயலக்ஷ்மி ஈருக உருக் கொண்டு அன்பர்களே உஜ்ஜீவிக்கும் வண்ணம் உயரிய கதி தருவது அஷ்ட பந்த ஸமர்ப்பணம்.

அநாவர்த்தம் : ஆலயத்தில் விழையும் பலவிதமான தவறுதல்கள், சோரன் பதிதன் உன்மத்தன் முதலியவர் தீண்டப் பட்டு மாறுதல் அடையச் செய்தல். மனுஷ்யன் பசு பக்ஷி முதலிய பிராணி களின் ம்ருதி மற்றும் தகாதனவாகிய செயல்கள் முதலிய நீக்கத்தின் பொருட்டுச் செய்யும் பிராயச்சித்த ரூபம்.

அந்தரிதம் : பிம்பத்தின் பிளவு, பிரத்யங்கம், உபாங்கம் இவற்றில் சிறிது பின்னம், வர்ணஸ்போடம், ஸ்தலகர்ம ஆதாரபத்மபீடம், வஸ்த்ரம், ஆபரணம் முதலிய இன்மை இவற்றைப் பூர்ணப் படுத்திச் செய்வது. இவற்றுள் முந்திய இரண்டும் நன்மைதரும் நாள் முதலியன பார்த்துச் செய்வது. பிந்திய இரண்டும் நாள் நக்ஷத்திரம் பாராமல் ஆவன செய்து உடனே கடமையைச் செய்வது. ஆகிய இவற்றின் செயலுக்கு உரிய இடம் யாக சாலே. அது கலாமயம், நிவ்ருத்தி முதலிய நான்கு கலேகள், நான்கு பக்கம் நிலேயாம். இதற்கு நான்கு கலசங்கள் ஒவ்வொரு நிலேயின் வலப்பக்கம் அமையும். நிலேக்கு இரு புறமும் வாசற் காப்பாளர்கள், நந்தி, மஹாகாளன், பிருங்கி, விநாயகர், விருஷபம், ஸ்கந்தர், தேவி, சண்டேசு வரர் ஆகிய எண்மருக்கும் எட்டுக் கலசங் கள் பிறகு கிழக்கு முதல் எட்டுத் திக்கும், மேல் கீழ் இரு திசைக்கு ஈசானத்தின் தெற்கும், நைர்ருதியின் வடக்கும் சேர்த்துப் பத்துத் திக்கில் இந்திரன், அக்னி, யமன், நிர்ருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன், பிரமன், விஷ்ணு ஆகிய திக்பாலர்கள் பதின்மருக்கும் பத்துக் கலசங்கள். அக்கினி கலசத்துக்கு வடக்கில் இறைவன் முதல் ஆதாரமாகிய சிவசூரியன் கலசமும், நைர்ருதியின் கிழக்கில் யாகபூமி பயன் தரச் செய்வ தற்கு வாஸ்துப்ரபன் கலசமும், வாயு கலசத்திற்குத் தெற்கில் யாக த்ரவிய ஸமிருத்திக்கும் உத்தமயாக மண்டப மாகும் தன்மைக்கும் காரணமாக மஹா லக்ஷ்மி கலசமும், வாயுவின் கிழக்கில் யாகத்தில் நேரக்கூடிய விக்ன நீக்கத் திற்கு விக்னவிநாயகர் கலசமும், ஈசானம் மேற்கில் யாகத்தில் எதையும் கேட்டுச் செய்வதற்கு ஸதாசிவர் முதல் ஸப்த குரு மூர்த்திகளின் கலசமும் சேர்ந்து இருபத்தேழு பரிவாரங்கள். யாகமாம் தன்மை பொருந்தவும், அவரவர்கள் செயலில் வழுவாதிருக்கவும், ஞானவான் தாங்கி நாதபிந்துவின் செயற்கையால் கலாதிகளேத் தோற்றுவித்து உலகம் உய்யும் உடன்பாடு உடையவர்கள் யாகேச்வரர், அஸ்த்ரவர்த்தினி. இவர் கள் கலசங்கள் இரண்டு யாக வேதிகை யின் மேல் பிரதானமாகிய உள்ளுறை மூர்த்தியின் கலசம் ; அதன் அபிந்நா சக்தியாகிய பீடசக்தியின் கலசம் சேர்ந்து முக்கியம். முழுமுதற் கடவுளின் அருள் வெள்ளம் பெறும் வண்ணம் ஜாக்கிரதையுடன் இருப்பதில் அஷ்ட மூர்த்தியாகிய அனந்தன், ஸூக்ஷ்மன், சிவோத்தமன், ஏகநேத்ரன், ஏகருத்ரன், த்ரிமூர்த்தி, ஸ்ரீகண்டன், சிகண்டி ஆகிய வித்யேச்வரர் கலசங்கள் எட்டும் பிரதான மூர்த்தியின் ஆவரணங்கள் சிவஸூர்ய மண்டலமத்யம், ஆசார்ய ஹ்ருதயம் உள்ளுறையான பிரதான கலசம், சிவாக்னி, குருமூர்த்தி, சித்தாந்த புஸ்தகம் ஆகிய ஆறு ஆதாரமும்

நிறைந்து உண்மை அன்பர்கள் உள்ளும் புறமும் தோன்றி எப்பொழுதும் இம்மை மறுமை பயனளிக்கும் அருட்சக்தி வாய்ந்தது சிவயாகம். இதை மனம் வாக்கு காயம் ஆகிய மூன்று கரணங் களும் ஒன்று சேர்த்து, சொல்லின் பொருள் நினைத்து, ஸூக்ஷ்மை மத்யமை வைகரி பச்யந்தி ஆகிய நாற்சொல் நிலை அமைந்து செயல் விளக்கம் செய்வதான கைகளால் ஆகிய முத்திரையும் சேர்ந்து, இறைவனிடம் லயித்து, அவனுல் தன்மை ஏற்றுப் பயனடையச் செய்யும் பெரும் சாந்தியும், மங்களமெல்லாம் திரண்டு சேர்ந்ததும், விடை பெறாமல், விநாயக வழிபாடுமுதல் மண்டல பூர்த்தி வரை நூற்றுப்பதினைந்து செயல் கொண்டதுமாகிப் பாமரர்களுக்கும் பர மானந்த பரவசமடையச் செய்து, பய னளிப்பது மஹா கும்பாபிஷேகம்.

கும்பாபிஷேக தரிசன பலன்

மந்திரம் முதலிய பலவகைகளினுலும் பிரகாசிக்கப்பெற்ற சிவ கலைகள் மின்சாரத்தை நடத்தும் சக்தி வாய்ந்த தாப்பக்கயிற்றின் வழியாக பிம்பங்களில் சந்தானம் செய்து மேற்கண்ட கும்ப ஜலத்தை அபிஷேகித்தலே கும்பாபிஷேகமாகும் ஒருவன் தனது வாழ்க்கையில் நாடோறும் அபுத்தி பூர்வமாகச் செய்ய நேர்ந்த தீவினைகள் அன்று செய்யும் சிவாலய தரிசனத்தால் தீரும். நாடோறும் தரிசிக்கும் நியமம் தவறினுல் உற்சவ தரிசனத்தால் தீரும். உற்சவ தரிசனம் செய்யாதவனுக்கு மஹாகும்பாபிஷேக தரிசனத்தால் தீரும். ஆகையால் வேறு எவ்வகையாலும் தீருத சிவா பராதங்களை தீர்க்கும் கும்பாபிஷேகத்தையும் பெருஞ் சாந்தி என்று திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகளும் திருவாய் மலர்ந் தருளினர்.

உரிஞ்சாய வாழ்க்கையமனுடையைப் போக்கும்
இருஞ்சாக்கியர்களெடுத்துரைப்ப நாட்டில்
கருஞ்சோலை சூழ்ந்த கபாலீச்சரம மர்ந்தான்
பெருஞ்சாந்தி காணுதே போதியோ பூம்பாவாய்

(மயிலாப்பூர் தேவாரம்)

கும்பாபிஷேக தெரிசனத்தால் தீவினைகள் நீங்கி புத்திரப் பேறுகளையும் சிவபக்தியும் சிவானந்தா முறுவர் என்பது உறுதி.

வியாஸ வித்வத் சதஸ் 1963—மலர்

ஸ்ரீ துர்கா ஸ்துதி

तामग्नि-वर्णां तपसा ज्वलन्तीं वैरोचनीं कर्मफलेषु जुष्टाम् ।
दुर्गां देवीं शरणमहं प्रपद्ये सुतरसि तरसे नमः ॥

தாமக்னி-வர்ணாம் தபஸா ஜ்வலந்தீம் வைரோசனீம்
கர்மபலேஷு ஜுஷ்டாம் ।
துர்க்காம் தேவீ சரணமஹம் ப்ரபத்யே ஸுதரஸி தரஸே நம: ॥

ओं कालाभ्राभां कटाक्षैररिकुलभयदां मौलिबद्धेन्दुरेखां
शंखं चक्रं कृपाणां त्रिशिखमपि करैरुद्वहन्तीं त्रिनेत्रां ।
सिंहस्कन्धाधिरूढां त्रिभुवनमखिलं तेजसा पूरयन्तीं
ध्यायेद्-दुर्गां जयाख्यां त्रिदशपरिवृतं सेवितां सिद्धिकामैः ॥

ஓம் காலாப்ராபாம் கடாக்ஷை-ாரி-குல பயதாம் மௌலிபத்தேந்து-
ரேகாம்
சங்கம் சக்ரம் க்ருபாணம் த்ரிசிகம்பி கரை-ருத்வஹந்தீம் த்ரிநேத்ராம் ।
ஸிஹ்மஸ் கந்தாதி ரூடாம்த்ரிபுவன-மகிலாம் தேஜஸா பூரயந்தீம்
த்யாயேத்-துர்க்காம் ஜயாகயாம் த்ரிதச-பரிவ்ருதாம் ஸேவிதாம்
ஸித்திகாமை : ॥

सर्वस्वरूपे सर्वेशे सर्वशक्ति-समन्विते ।
भयेभ्यस्त्राहि नो देवि दुर्गे देवि नमोस्तुते ॥

ஸர்வஸ்வரூபே ஸர்வேச ஸர்வ-சக்தி-ஸமன்விதே ।
பயேப்யஸ்-த்ராஹி நோ தேவி துர்க்கே தேவி நமோஸ்துதே ॥

अष्टौ भुजाङ्गीं महिषस्य मर्दिनीं
सशंख चक्रां शरशूलधारिणीं ।
तां दिव्य योगीं सहजातवेदसीं
दुर्गां सदा शरणमहं प्रपद्ये ॥

அஷ்டௌ புஜாங்கீம் மஹிஷஸ்ய மர்த்தினீம்
ஸசங்க சக்ராம் சர சூல தாரிணீம் ।
தாம்திவ்ய யோகீம் ஸஹ ஜாதவேதஸீம்
துர்க்காம் சதா சரணமஹம் ப்ரபத்யே ॥

थेदष्ट भुजां समस्तजननीं सव्येतरादः
करे श्यामां शूलमसिहचक्र विजितौ ।
शंखं धनुः केडकं पिप्राणां महिषोत्तमाङ्गविलस्त क्षेत्नादः
करां दुर्गी पापविनाश तीर्थ तटकाम सिंहस्थितां प्राङमुखीं ॥

தே தஷ்ட புஜாம் ஸமஸ்த ஜனனீம் ஸவ்யேதரராத :
கரே ஸ்யாமாம் சூலமஸிம்ம சக்ர விஜிதென |
சங்கம் தனு: கேடகம் பிப்ராணும் மஹிஷாத்தமாங்க விலத்த
க்ஷேத்ரராத :
கராம் துர்க்காம் பாபவிஞச—தீர்த்த தடகாம் ஸிம்மஸ்திதாம்
பிராங்முகீம் ||

लीला विलास विपिनस्तित पापनाश
तीर्थान्तिकस्त गिरिशालय दक्षिनस्ते ।
देवी तपोवने वरे सूतप शान्ति
देयात् सुखं महिषदानव दर्पहन्त्रि ॥

லீலா விலாஸ விபிஸைஸ்தித பாபநாச தீர்த்தாந்திகஸ்த—கிரி சாலய
தக்ஷிணஸ்தே
தேவீ தபோவனே வரே ஸுதப சாந்தி தேயாத்சுகம் மஹிஷ தானவ:
தர்ப்ப ஹந்திரி

தீப பூஜா விதானம்

பிரதி செவ்வாய். வெள்ளிக் கிழமைகளில் காலையில் ஸ்த்ரீகள் ஸ்நானம் செய்துவிட்டு சுசிருசியாக, மங்களகரமாக, திலகம் குங்குமம், புஷ்பம் தரித்துக் கொண்டு, ஆடையை நம் கலாசரத் திற்கு ஏற்ப மடிசார் வைத்து கட்டிக்கொண்டு, பூஜா அறையில் அலங்கார கோலம் இட்டு, ஒரு பலகையின்மேல் ஒரு தாம்பாளத்தில் பஞ்சமுக குத்துவிளக்கு (வெள்ளியோ, பித்தளேயோ) வைந்து ஐந்து முகமும் நெய் அல்லது எண்ணெய் வார்த்து ஜோதியாக தீபம் ஏற்றி, அந்த குத்துவிளக்கிற்கு சந்தனம், குங்குமம், புஷ்ப மாலே, சிறிய பாவாடை அலங்கரித்து. அம்பாளாகவே பாவித்து, அதன் சமீபம் ஒரு லிட்டர் அரிசி, ஒரு தேங்காய் வைத்து பின் பூஜையை தொடங்கவேண்டும். பூஜாவிதானப்படி, சுக்லாம் பர தரம் குட்டிக் கொண்டு, கணபதி பிரார்த்தனே செய்துவிட்டு பின் அடுத்த பக்கங்களிலுள்ள சப்தஸ்லோகி துர்கா என்ற ஏழு ஸ்லோ கங்களே ஏழு தடவை பாராயணம் செய்துவிட்டு, பின் அதில் முக்ய ஸ்லோகமான—'சர்வ மங்கள மாங்கல்யே'—என்ற ஒரு ஸ்லோ கத்தை ஏழு தடவை சொல்லிக்கொண்டு தீபத்தை சுற்றி ஏழு தடவை பிரதக்ஷிணம், ஏழு நமஸ்காரங்கள் செய்துவிட்டு பின் தீபத்தின் பாதங்களில், துர்கா அஷ்டோத்ர சதநாம அர்ச்சனே குங்குமத்தால் செய்து, தூபம், தீபம் காட்டி, நிவேத்யமாக அவர வர்கள் சக்திக்கு ஏற்ப தேங்காய், பழங்கள், வெற்றிலே பாக்கு, சர்க்கரை பொங்கல் அல்லது பாயஸம் இவைகளே நிவேதனம் செய்து ஒரு சுமங்கலிக்கோ, கன்னிகைக்கோ தாம்பூலாதிகள், சந்தனம், குங்குமம், இயன்ற அளவு தக்ஷிணே கொடுத்து பூஜையை பூர்த்தி செய்துகொள்ளவேண்டும். இந்த பிரகாரம் பக்தி சிரத்தை யுடன் அனுஷ்டித்து வந்தால் ஸ்ரீ துர்காதேவியின் கடாக்ஷத்தால் அதி விரைவில் சகல துரிதங்களும் நீங்கி ஸர்வ மங்களமும் ஏற் பட்டு தாம்பத்ய அன்யோன்யம் பெருகி இல்வாழ்க்கையில் ஸகல ஸம்பத்துகளுடன் பிரகாசிக்க ஸ்ரீ அம்பாள் அனுக்கிரகம் பரிபூரண மாக கிடைக்கும் என்று மகரிஷிகளாலும், ஆசார்யர்களாலும் சொல்லப்பட்ட வாக்கு. இத்த பூஜாவிதானத்தை யாராவது ஒரு உபாசகரிடம் உபதேசம் பெற்று செய்வது உத்தமம்.

எல்லா தினங்களிலும் காலே மாலே இந்தஸ்லோக பாராயணம் செய்வது மிக விசேஷம்.

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீட

ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமிகள்

அருளிச் செய்த உரைகளின் சாரம் :

1. நாம் உலகிலுள்ள இன்பங்களை அனுபவிக்கிறோம். வாழ்க்கைக்கு இன்றியமையாத பொருள்களையும் தேடி, அவைகளை உட்கொண்டும், உபயோகித்தும், வாழ்க்கையை நடத்தி வருகிறோம். முதியோர்களையும், குழந்தைகளையும், ரக்ஷிப்பதற்கும் இத்தகைய பொருள்கள் அவசியமாகின்றன. இத்தகைய பொருள்களைச் சுவைத்தும், கண்டும், கேட்டும், முகர்ந்தும், உணர்ந்தும். உண்டும், குடித்தும், உடுத்தும், போர்த்தும் அனுபவிக்கிறோம். இப்பொருள்களை எல்லாம் அனுபவிப்பதற்குக் கண், காது, சுவை, மூக்கு, உணர்ச்சி என்கிற பஞ்ச இந்திரியங்கள் அல்லது ஐம்புலன்கள் நமக்கு முக்கியமான கருவிகளாக இருக்கின்றன. இந்த ஐந்து கருவிகளைக் கொண்டே உலகப் பொருள்களை எல்லாம் நாம் அனுபவிக்கிறோம். ஆனால், இப் பொருள்களை நாமே உண்டாக்கிக் கொள்ளவில்லை. நம்மால் உண்டாக்கவும் முடியவில்லை. ஒரு பருக்கை சோறோ, ஒரு வாழை இலையோ நம்மை மீறிய சக்தியாலேயேதான் உண்டாகின்றது. அந்த சக்தியே பரமாத்மா.

நாம் செய்யும் உபசாரங்களுக்கும், நாம் மனமறிந்து செய்யும் அபசாரங்களுக்கும் உண்டி கிட்டுவதுகூட அவருடைய கருணை ஒன்றாலேயே என்பது நாம் ஆலோசித்தால் நமது மனசாஷிக்குத் தெரியும். அவர் கொடுத்த பொருள்களை, அவருடைய நினைவேயின்றி, நாம் சாப்பிட்டுவிட்டு, கெட்ட வழியிலும் அனுபவித்து விட்டு, இவ்வுலகிலிருந்து ஒருநாள் மாய்ந்து போவதில் ஒரு லக்ஷியமும் நிறைவேறவில்லை. நமது வாழ்க்கையே வாழ்க்கையுடன் சேர்ந்ததில்லை, ''பேசாத நாளெல்லாம் பிறவா நாளே.'' 'திருவீழிமிழலையானைச் சேராதார் தீதருக்கே சேருகின்றார்.'' நம்மால் செய்யமுடியாமல், நம் சக்திக்கு மீறின ஒரு சக்தியால் ஆக்கப்பட்ட பொருள்களை, அப்பராசக்தியாம் அம்மையப்பனுக்கு அர்ப்பணம் செய்யாமல், நாம் தின்று விட்டுச் சாதல், பெரும் நன்றியற்ற செயலாகும். அவர் கொடுத்த பொருளை அவருக்கு நன்றியுடன் அர்ப்பணம் செய்து விட்டு, அவைகளை யனுபவிக்க யனுபவிக்க, அந்த நன்றி ஊறி மனிதத் தன்மைக்கு அறிகுறியான அமிர்தமாய் ஆறுய்ப் பரவி, உலகமும், உலகத்தில் வளரும் பொருள்களும். ஆன்மகோடிகளும் பன்மடங்கு செழிக்கத் துணையாய் நிற்கும். அந்த நன்றிக்குப் பூஜை என்று பெயர்.

2. நாம் உடுக்கிறோம். ஒரு சிறு ஆடையைச் சுத்தமாய் அவருக்கு அர்ப்பணம் பண்ணி விட்டு உடுத்தால், உடைப் பஞ்சம் குன்றிவிடும். நாம் புசிப்பதற்கு முன் அவருக்கு நிவேதனம் செய்து விட்டு உண்டோமானல் அதுவே நம்மையான ஊண். நன்றி கெடாத ஊண்.

''நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா
நித்தலுமெம் பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்குமிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்துமாடிச்
சங்கராசய போற்றி போற்றி யென்றும்
அலைபுனர்சேர் நெஞ்சடையெம் ஆதியென்றும்
ஆரூரா என்றென்றே அலறுநில்லே,''

(அப்பர்—6-ம் திருமுறை)

3. நாம் வீடுகட்டுமுன் அவருக்கு ஒரு வீடு கட்டவேண்டும். நாம் விளக்கேற்றுமுன் அவருக்கு ஒரு விளக்கு ஏற்றவேண்டும். நம் வீட்டை மெழுகுமுன் அவர் வீட்டை மெழுக வேண்டும். "அறம், பொருள், இன்பம், வீடு" என்ற நான்கு பணிகளில் அவர் வீடு நம் வீடாவதே வீடு. அதே மோக்ஷம். நாம் உபயோகப்படுத்தும் ஒவ்வொரு வஸ்துவும், ஆபரணம், வாகனம், வாசனைத் திரவ்யம், நற்காட்சிகள், நல்ல கானம், குடை, விசிறி, அலங்காரங்கள், புஷ்பம், பாதுகை போன்ற எல்லா சாதனங்களையும் அவருக்குப் பூர்ணமாக அர்ப்பணம் செய்து, பின்னரே நாம் உபயோகிக்க வேண்டும்.

4. இவ்விதம் அந்தணர் சிவ, விஷ்ணு தீக்ஷைபெற்றவர்கள் சிலர் சுயமாகவே ஆண்டவனுக்குப் பூஜைசெய்து புனிதமாக வாழ்வு நடத்தி வந்தார்கள். உலகத்திலுள்ள எல்லா மக்களில் பெரும்பாலானவர்களுக்குக் குடும்பத்தை ரக்ஷிக்கவேண்டி சுயமாகவே பூஜை செய்யும் வாய்ப்பு கிடைப்பது அரிது. ஊரில் பொதுமக்கள் எல்லோரும்சேர்ந்து ஈசனுக்கு ஒரு கோயில் கட்டி, அதற்குப் போதுமான மான்யமும் ஏற்படுத்தி, அங்கு பூஜைக்கட்டளை செய்த பலன் கிடைக்கும். அதற்கு எந்த முறைப்படி பகவானுக்கு வாகனம், வஸ்த்ரம், நிவேதனம் முதலிய உபசாரங்களை நாம் செய்யவேண்டுமோ, அம்முறைகளெல்லாம் அடங்கியுள்ள நூல்களே ஆகமங்கள்.

5. மக்கள் பொது நன்மைக்காகக் கட்டி இருக்கும் ஆலயங்களில் நடக்கும் பூஜைக்குப் பரார்த்த பூஜை என்று பெயர். வீட்டில் செய்யும் பூஜைக்கு ஆத்மார்த்த பூஜை என்று பெயர். அரசாங்கத்தில் தபால் தந்தி இலாகா மூலம் செய்தியையோ, பொருளையோ, மற்றோரிடத்திற்கு சேர்ப்பதற்கு வகுத்திட்ட முறைகளை அனுசரித்தால்தான் எப்படி அவை பயன்படுமோ அவ்விதமே முக்கியமாக பரார்த்த பூஜையில் ஆகம விதிமுறைகள் புறக்கணிக்கப்படாமல் அனுசரிக்கப்படவேண்டும். கட்டிய சிவாலயங்களில் பூஜை ஒரு நாளும் நிற்காமல் நடந்து வரவேண்டும்.

6. நம் நாட்டில் பொதுவாக பாடல் பெற்ற க்ஷேத்திரங்கள் என்று சொல்லப்படுபவை 108 திருப்பதி, 1008 சிவாலயங்கள். 108 திருப்பதிகள் இப்பொழுது மிருக்கின்றன. ஆனால் சிவ க்ஷேத்திரங்களில் 1008-ம் எங்கெங்கு இருக்கிறது என்று விளக்கமாகத் தெரியாவிடினும் தெரிந்த க்ஷேத்திரங்களின் பாடல்களிலேயே சில க்ஷேத்ரங்கள் சொல்லப்பட்டிருப்பதால் அவைகளின் இருப்பிடம் ஓரளவு நிர்ணயமாக நிர்ணயிக்கலாம். வைகளுக்கு "வைப்பு ஸ்தலம்" என்று பெயர்.

7. நினைவுக்கு எட்டாத காலம் முதல் சுமார் ஆயிரம் வருடங்களுக்கு முந்தி விஷ்ணு பக்தர்களும், சிவபக்தர்களும் தங்கள் வாழ்நாள் முழுவதும் ஈஸ்வரனுக்கே அர்ப்பணம் செய்து க்ஷேத்ராடனம் செய்து க்ஷேத்ரங்களில் மனமுருகிப் பகவானைத் துதித்து அவர் அருளைப் பெற்றுப் பகவானுடைய அனுக்ரஹத்தினாலே ஏகாக்ரமாகத் தானும் நற்கதி அடைந்து உலக க்ஷேமத்தையும் ஏகாக்ரமாக்கி இருந்து வந்தார்கள். இவர்கள் க்ஷேத்ரம் க்ஷேத்ரமாகச்சென்று இறைவனைத் துதிசெய்து தாங்கள் கடைத்தேறவும், உலகத்திலுள்ள சகல ஜீவராசிகளும் க்ஷேமமாக வாழவும் தொண்டு செய்துவந்தார்கள்.

8. அவர்களில் சிவ பக்தர்களில் முக்கியமானவர்களுக்கு நால்வர் என்று பெயர். விஷ்ணு பக்தர்களில் 12 ஆழ்வார்கள் என்று சொல்வது வழக்கம். தவிர நாயன்மார்கள் 63. சித்தர்கள் 18. சித்தர் கணக்கிலும், நாயன்மார் கணக்கிலும் சேர்ந்த ஒருவர் திருமூலர். அவரது நூல் 'திருமந்திரம்'.

ஆற்றரு நோய்மிக் கவனி மழையின்றிப்
போற்றரு மன்னரும் போர்வலி குன்றுவர்
கூற்றுதைத் தான்திருக் கோயில்க ளெல்லாஞ்
சாற்றிய பூசைகள் தப்பிடில் தானே. (517)

முன்னவனார் கோயில் பூசைகள் முட்டிடின்
மன்னர்க்குத் தீங்குள வாரிவளங்குன்றுங்
கன்னங் களவு மிகுந்திடுங் காசினி
என்னரு நந்தி எடுத்துரைத் தானே. (518

9. க்ஷேத்ரங்களில் உள்ள கோயில்களில் போதாயன சூத்ரத்தில் சொல்லியிருக்கும் சிவ பூஜை, விஷ்ணுபூஜை இவைகள் முறைப்படி நடந்து வந்தன. பூஜைக் கைங்கர்யத்தில் பணி யாற்றுபவர்கள் நியமத்துடனும், சிஷ்டாசாரத்துடனும் கைங்கர்யம் செய்து க்ஷேத்ரங்களில் ஈஸ்வர ஸாந்நித்யம் குன்றுமல் இருக்கும்படி ரக்ஷித்து வந்தார்கள். அந்த க்ஷேத்ரங்களில் பகவான் ப்ரத்யக்ஷமாகி ஈஸ்வர ஸாந்நித்யமும் வளர்ந்து வந்தன.

10. பூஜைகளில் அநேக உபசாரங்கள் உண்டு. சில முறைகளில் நூறுக்கு மேல் அதிக மான உபசாரங்களும், சில முறைகளில் 64, 32 அல்லது 16 உபசாரங்களும் விளக்கப்பட்டிருக் கின்றன. கடைசியாக ஐபம் செய்யும்பே6து 5 முக்கிய உபசாரங்கள் விதிக்கப்பட்டிருக் கின்றன. கையின் ஐந்து விரலைக்கொண்டு இந்த ஐந்து உபசாரங்களையும் ஈஸ்வரனுக்கு அர்ப் பணம் செய்யவேண்டும்—சந்தனம், புஷ்பம், தூபம், தீபம், நைவேத்தியம்,—நாம், இவ்வுலகப் பொருள்களிலுள்ள இன்பங்களை ஐம்புலன்கள் என்ற ஐந்து இந்திரியங்களாலும் நுகர்வ தாலும், கையிலுள்ள ஐந்து விரல்களே எல்லா காரியங்களையும் செய்வதாலும் இந்த பஞ்ச உபசார பூஜை விதிக்கப்பட்டிருக்கிறது.

11. ஷோடசோபசார பூஜை, த்யானம், ஆவாஹனம், பாத்யம், அர்க்யம், ஆசமனியம் மதுபர்க்கம், ஸ்நாநம், வஸ்த்திரம், கந்தம், அக்ஷதம், புஷ்பம், தூபம், தீபம், நைவேத்யம், நீராஞ்ஜனம், நமஸ்காரம் இவை ஷோடசோபசார பூஜையில் அடங்குகின்றன. இவ்விதம் ஆண்டவனுக்கு ஒரு ஆலயத்தைக் கட்டி எந்த முறையில் கட்டினல் அதில் ஸாந்நித்யம் வருமோ, எந்த முறையில் ஸ்தூல லிங்கரூபமான கோபுரங்கள் கட்டினுல், எந்த முறைப்படி நியமத்துடன் பரார்த்த பூஜை செய்தால் உலகம் நன்றிசெலுத்தியதாக ஆகுமோ அந்த முறைகள் அடங்கியுள்ளவை சிற்ப சாஸ்த்ரங்களும், ஆகம சாஸ்த்ரங்களும் ஆகும்.

12. சிவாகமம், வைகானச பாஞ்சராத்ர ஆகமங்கள், தேவி தந்தரம் இவைகள் எல்லா வற்றிலும் நான்கு பாதங்கள் உள்ளன. முறையே, சரியா பாதம், க்ரியா பாதம், யோக பாதம், ஞான பாதம் என்பவை.

(i) சரியை—என்பது நித்ய ஒழுக்க ஆசாரங்களுக்கு வேண்டியதைச் சொல்லுபவை.

(ii) க்ரியா பாதம்—செய்யவேண்டிய பூஜை முதலியவைகளைச் சொல்லுபவை. அதில் ஆத்மார்த்தபூஜை, பரார்த்த பூஜை இவை யடங்கும்.

(iii) யோக பாதத்தில்—எல்லாவற்றையும் விட கடுமையாக மனதை யடக்கி நிலை நிறுத்தி அதை ஈசனிடம் கொண்டு சேர்க்கவேண்டிய பிராணுயாமம், த்யாநம் நிஷ்டை முதலிய முறை உபதேசிக்கப்பட்டுள்ளது.

(iv) மனதை வெற்றி கொண்டவன் உலகத்தை வெற்றிகொள்வான், அதைச் சாதிக்காதவன் வீணே வாழ்கிறுன். அந்த வெற்றிக்கு உதவுவது நான்காவதான ஞானபாதம்.

13. எப்பொருளிலும் நின்றவன் ஈசனே. அந்தத் தத்துவத்தை ஆகமங்கள் மூலம் விளக்குவது ஞானபாதம். ஒவ்வொரு அணுவிலும் அணுவாய் இருப்பவன் ஈசன் என்று நாம் கதையைக் கேட்டிருக்கிறேம். ஈசனைத் தவிற வேறு ஒரு பொருள் இல்லை என்ற அனுபவம் வந்து விட்டால் ஆசைக்கு இடமில்லை கோபத்திற்கு இடமில்லை. பாபத்திற்கு உணர்வில்லை, பழிக்கு உணர்வில்லை. விழித்துக்கொண்டிருக்கும் போதும், கனவு காணும் போதும், எப்பொருளை உணர்ந்தாலும் அவையெல்லாம் ஈசனே என்ற சந்தேகமற்ற நிலையே ஞான நிலை. அதுவே வீடு, அதுவே பேறு. அதை விளக்கும் பகுதியே எல்லா ஆகமங்களிலும் உள்ள ஞானபாதம்.

14. பாரத, ராமாயணங்களிலும் இவ்விஷயம் கூறப்படுகிறது. ஆனல் சரியை எனும் ஒழுக்கமுறை முக்யமாக வற்புறுத்தப்படுகிறது.

15. ஆகாரமும், அனுஷ்டானமும், தானமும் தர்மமும் எல்லாவற்றிற்கும் சாஸ்த்ரம் அஸ்திவாரம். அர்த்தமில்லாத பிதற்றலான வார்த்தைகளுக்கெல்லாம் சித்தர்களான மகான்கள், தத்துவமாக உபயோகப் படுத்துவதைக் கர்ணபரம்பரையாகக் கேட்டிருக்கிறேம். ஒரு சித்தர் மகானிருந்தார். பொதுமக்கள் அவரிடம் பக்தி செலுத்தி வந்தார்கள். அவரைப் பார்க்க வேண்டுமென்று அரசன் விண்ணப்பம் செய்தார். அவரை அவன் அரண்மனைக்கு வருமபடியும் மந்திரிகளை விட்டுக் கூப்பிட்டான். சித்தர் இருந்தவிடம் விட்டு அசைய வில்லை. அரசனே அவரிடம் சென்றுர். அரசனைப் பார்த்துக் கன்ன பின்ன என்றுர். கூடச்சென்ற சேனதிபதி முதலியவர்களுக்கு கோபம் வந்துவிட்டது. அவரை சிக்ஷிக்க ஆரம்பித்தனர். அரசன் சற்று நிதானித்துக் கொண்டு ஏன் அப்படிச் சொன்னீர்? என்று கேட்டான். சித்தர் உடனே, நீ எப்படி வேண்டுமானுலும் சிக்ஷித்துக்கொள். நீ தானத்தில் கர்ணன் அல்லது 'கன்ன' என்று உலகம் வழங்கும் படியாய் விளங்கவேண்டும். தர்மத்தில் அவன் 'பின்ன' அவன் தம்பி என்றபடி தர்மபுத்திரனக விளங்கவேண்டுமென அவர் சொன்னர். பாரதம் கன்ன பின்னவில் அடங்கியது.

16. பொதுவாக நாட்டிலுள்ள நிலங்களில் சரிபாதி கோயில்களின் தான தர்மங்களுக்கு விடப்பட்டிருந்தன; தான்யத்தை விடப்பட்டிருந்தன; தான்யத்தை விற்காமல் அன்னமாக்கி ஆண்டவனுக்கு அர்ப்பணம் செய்து அவன் ப்ரஸாதமாக அந்த அன்னம் ஒரு பட்டை காலணு, அரையணு வீதமாக விநியோகிக்கப் பட்டு வந்தால் கதியில்லாத ஏழைகள் வெளியில் கால் ரூபாயைக் கொண்டு போக்கிக் கொள்ளக் கூடிய பசிப்பிணியை எளிதில் தெய்வ அனுக்ரஹத்துடன் போக்கிக் கொள்ளக்கூடிய வாய்ப்பும் ஏற்பட்டிருந்தது. எல்லா கலைகளின் வளர்ச்சிக்கும் சக்தியற்ற மக்கள் வாழ்க்கைக்கும், நமக்கு எல்லாவற்றையும் அளிக்கும் ஆண்டவனுக்கு நன்றி செலுத்துவதற்கும் ஆலயங்கள் நாடு முழுவதும் ஊன்றுகோலாக நின்றன. இன்றும் அடியோடு வாடி விடாமல் அன்பர்களின் பக்தி எனனும் அமிர்தம் செறியக் கூடிய ஒன்று, நூறு ஆயிரமாய் வளரக்கூடிய ஆற்றுதல் வாய்ந்தனவாயும் நன் கண்முன் சாஸ்வதமான முறையில் இருக்கிறது.

17. நமது நாடுகளில் ஆயிரம், ஆயிரத்து ஐநூறு ஆண்டுகளுக்கு முன் இருந்த அநேக கல்வெட்டுகளில் கோவில்தோறும் பாரத ப்ரசங்கம் நடந்ததாக ஆராய்ச்சி இலாகா மூலம் வெளிவந்துளது. கம்போடியா நாட்டிலும் ஜாவா நாட்டிலும் கூட இம்மாதிரி பாரதப் பிரசங்க கல்வெட்டுகள் நம் நாட்டைவிட அதிகமாகக் கிடைத்திருக்கின்றன. இப்பொழுது

நம் நாட்டில் கிராமதேவதை கோயில்களில் மட்டும் பாரதப் பிரசங்கம் நடந்து வருகிறது எல்லாக் கோயில்களிலும் இவைகளை வளரச் செய்ய வேண்டும்.

18. தேவ, அசுரர்களில் அநேக புத்திமான்களும், தவ முனிவர்களும் தங்கள் வாசஸ்தலங்களிலும், ஆசிரமங்களிலும் ஆத்மார்த்த பூஜைக்கு வைத்துக் கொண்டிருந்த மூர்த்திகளும் லிங்கங்களும் பிற்காலத்து மானிடர்களுக்கு அருள் செய்யும் புனித க்ஷேத்ரங்களாக ஆகியிருக்கின்றன, அம் முனிவர்கள் பிற்காலத்து மக்களுக்கு ஏற்படப்போகும் மனதை அடக்கும் சக்திக் குறைவை உணர்ந்து தங்களது தபஸை கருணையினால் அந்த வழிபாடு மூர்த்திகளிடம் அர்ப்பணம் செய்து இங்குவந்து வழிபடும் பிற்காலத்திய எளிய மாந்தர்களுக்குத் தாங்கள் பூர்ணமாக அருள் சுரக்க வேண்டுமென்று ப்ரார்த்தித்துக் கொண்டுருக்கிறார்கள். அப் புனித மூர்த்திகளுக்குப் பிற்காலத்து அடியார்களும், பெருமக்களும், அரசர்களும், சில்ப முறைப்படிக்கும், ஆகம முறைப்படிக்கும், ஆலயம் வைத்து வழிபாடு முறைகளை வகுத்திருக்கிறார்கள், வேத ஆகமம் போற்றிய ஹிந்து சமூகத்தினர் என்றென்றைக்கும் வழிபாடுகளைக் குறையின்றி நடத்தி, நம் பிறவியை உய்யுமாறு கடமைப்பட்டிருக்கிறோம்.

(நன்றி—வியாச வித்வத்சதஸ் நாராயணபுரம் மலர் 1973)

சுபம்

GODDESS DURGA AT AMMANGUDI

(K. VISWANATHAN & M. RAMASWAMY)

Sri Kailasanathar Temple in the Village of Ammangudi, 12 Kilometres east of Kumbakonam is a very ancient temple.

The sanctity of the place as well as the temple is evident from the Devi Durga—Naradha Samvada (discourse), in the 66th Chapter of "Kshethrakanda" in "Sriskandam".

Devi Durga after killing the demon Mahisa was affected by "Siva aparadha" and "Asurahatti" Doshas (afflictions). The blood stains in her spear could not be washed off as it had been used to pierce the Chest of demons wearing Sivalingams around their necks, who were also devotees of Lord Siva. On account of this, Devi Durga was upset and restless.

Sage Narada, seeing the mental agony of Devi came to her aid and said "Devi, I will now reveal a secret. South of Madhyarjunam and east of Thirunageswaram, there is a place, and you worship Lord Siva there to get rid of your Doshas (affliations). Devi was happy and joyous to hear this from Narada, and accordingly, she descended in Chola Desa, had her bath in Cauvery, wore Rudraksham and Thrupundram. (VIBHUTI), reached the thapovanam (at present known as Ammangudi) for doing penance. After installing the Siva Lingam which adorned the neck of the demon "Mahisha" as "Kailaseshwarar" and Lord Ganesa (Tapas Vinayagar) to protect her Tapas from evil spirits and other obstacles Devi worshipped Siva, and did rigorous penance for 12 years. From thence the place is known as "Devi Tapovanam". Devi washed off the blood stained spear in the tank, north of the temple, and the tank came to be known as. "Papa Vimochana Theertham". Lord Kailaseshwarar pleased with Devi's penance, (afflictions) freed her of all Doshas, asked her to establish herself in the same place and bless the devotees coming to worship Her. As the legand goes, Devi herself installed Kailasanathar and Parvathi Devi in the temple where she had taken abode, and established herself as "Ashtabhuja Durga Devi" and "Mahishasura-mardhani".

The archaeological records and the temple inscriptions indicate that the temple in its present from was built in 994 A.D. by Krishnan Raman Mummudi Chola, Brahma Marayan, Commander-in-Chief of 3

Chola emperors—Raja Raja Chola I, Rajendra Chola I and Rajathi Rajan. He named the temple as "Raja Rajeswaram". He was also the chief Olai-Nayakkan (Chief Secretary) during the days of Raja Raja I. He was a brahmin and his native place was Ammangudi. It appears that a brahmin Colony was established in this village during the reign of Raja Raja Cholan and the village received the name "Keralantaka Chaturvedi Mangalam. Keralantaka was a title assumed by Raja Raja I to mark his conquest of Kerala.

The outer walls of the big temple (Brahadeeswarar) at Tanjore was also built by Krishnan—Raman, and he was responsible for renovating several temples in the areas covered by the present Tanjore, Salem, Dharmapuri, North Arcot Districts etc. This temple had enjoyed the patronage of Krishnan Raman, his wife, and later his son Govindan Raman who also held similar positions under the successors of Raja Raja Chola.

The presiding deity of this temple is "Sri Kailasanathar. Shri Durga is enshrined in a separate sanctum south of "Sri Kailasanathar" facing east. The unique feature of Durga Sannadhi facing East along with Sivan Sannadhi is considered holy and auspicious. There are ornamental Carvings on the doorway of Kailasanathar temple and the Dwarapalakas are masterpieces of sculptural elegance. The Bikshadanar and Sun God are beauties of sculpture carved delicately with deft hands

Shri Durga is depicted as mounted in Simha (lion) tredding demon Mahisa with her left foot. She is resplendant with all "Saktis" and "Thejas" and armed with powerful weapons dedicated to her by Brahma, Vishnu, Siva, and all Devas for overpowering the Asura. The Ashta-Bhuja Durga-Parameswari, guards and protects all with powerful weapons in her eight hands—1st hand having the arrow given by "Vayu", 2nd having Chakram given by Lord Vishnu, 3rd hand having the Vajrayudam (Sword) given by Indra, 4th hand having the spear offered by Lord Siva (which ultimately killed Mahisha), 5th hand having the Conch, 6th hand having the both, 7th hand having the shield, and the 8th hand over the head of Mahisha blessing him even at the hour of killing.

There is also another a very old idol of Devi Durga just by the side of this Durga.

The utsava vigraha made of "Panchaloka" (five metals) is exactly a similar depiction of Devi Durga.

There is a separate shrine south of Durga Temple for Lord Ganesa worshipped by Durga during her penance, known as "Tapas Vinayagar". This is apart from the usual Vinayagar Sannadhi located in South west. This idol of Tapas Vinayagar is another masterpiece of sculptural talent, the deity wearing a serpent around the waist and Rudrakshamala in the hand.

The Dakshinamoorthy idol is located (Bull) in a unique position, seated in Rishaba, and the absence of Sanakathi Munivergal (sages) is conspicuous.

There are many inscriptions on the walls of the temple stating the endowment of lands for carrying out the day-to-day Poojas and other rituals.

The "Sthala Vruksham" (Temple tree) is Bilba and the sacred water is the "Papa Vimochana Theertham" of the tank north of the temple.

There is no separate sannadhi for Navagrahas, as "Sri Durga" herself is above all the Navagrahas. And the pooja we do for Durga in the temple is equal to doing poojas for all the Devatas (Gods), as Devi Durga herself is and embodiment of all the Thejas (तेजस) of Devas.

This temple is atracting large number of devotees from this state a well as from outside the state. For many people Devi Durga-Parameswari shines as their favourite deity (இஷ்ட தெய்வம்) and for many others as their "Family Deity" (குல தெய்வம்). The devotees firmly believe that worship of Sri Durga at Ammangudi especially after taking bath in the Papa Vimochana Theertha of the tank on Tuesday will please Devi and She will shower Her Blessings protecting them from all evils and miserlies. Let us all worship Sri Durga Parameswari for giving her Divine Blessing always.

ஸப்தச்லோகீ துர்கா

शिव उवाच—

देवि त्वं भक्तसुलभे सर्वकार्यविधायिनि ।

कलौ हि कार्यसिद्ध्यर्थमुपायं ब्रूहि यत्नतः ।।

சிவ உவாச—

தேவி த்வம் பக்தஸுலபே ஸர்வகார்ய விதாயினி।

கலௌ ஹி கார்ய ஸித்யர்த்தமுபாயம் ப்ரூஹியத்னத :॥

देव्युवाच—

श्रृणु देव प्रवक्ष्यामि कलौ सर्वेष्टसाधनम् ।

मया तवैव स्नेहेनाप्यम्बास्तुतिः प्रकाश्यते ।।

தேவி உவாச—

ச்ருணு தேவ ப்ரவக்ஷ்யாமி கலௌ ஸர்வேஷ்ட ஸாதனம் ।

மயா தவைவ ஸ்னேஹேனாப்யம்பாஸ் துதி : ப்ரகாச்யதே ॥

ॐ अस्य श्रीदुर्गासप्तश्लोकीस्तोत्रमन्त्रस्य

नारायण ऋषिः अनुष्टुप् छन्दः,

श्रीमहाकालीमहालक्ष्मीमहासरस्वत्यो देवताः ।

श्रीदुर्गाप्रीत्यर्थे सप्तश्लोकीदुर्गापाठे विनियोगः ।

ஓம் அஸ்ய ஸ்ரீ துர்கா ஸப்தச்லோகீஸ் தோத்ரமந்த்ரஸ்ய

நாராயண ரிஷி : அனுஷ்டுப் சந்த:,

ஸ்ரீமஹாகாளீ மஹாலக்ஷ்மீ மஹா ஸரஸ்வத்யோ தேவதா :

ஸ்ரீ துர்க்காப்ரீத்யர்த்தே ஸப்த ஸ்லோகீதுர்காபாடே விநியோக:

ओं ज्ञानिनामपि चेतांसि देवी भगवती हि सा ।

बलादाकृष्य मोहाय महामाया प्रयच्छति ।। १ ।।

ஓம் ஞானினாமபி சேதாம்ஸி தேவீ பகவதீ ஹி ஸா

பலாதாக்ருஷ்ய மோஹாய மஹா மாயா ப்ரயச்சதி ॥

दुर्गे स्मृता हरसि भीतिमशेषजन्तोः

स्वस्थैः स्मृता मतिमतीव शुभां ददासि ।

दारिद्र्यदुःखभयहारिणि का त्वदन्या

सर्वोपकारकरणाय सदाऽऽर्द्रचित्ता ।। २ ।।

துர்க்கே ஸ்மிருதா ஹரஸி பீதி மசேஷஜந்தோ :

ஸ்வஸ்தை : ஸ்மிருதா மதிமதீவ சுபாம் ததாஸி ।

தாரித்ர்ய துக்கபயஹாரிணி கா த்வதன்யா

ஸர்வோபகாரகரணாய ஸதா ஆர்த்ரசித்தா॥

सर्वमङ्गलमाङ्गल्ये शिवे सर्वार्थसाधिके ।

शरण्ये त्र्यम्बके गौरि नारायणि नमोऽस्तु ते ।।३।।

ஸர்வ மங்கள மாங்கல்யே சிவே ஸர்வார்த்தஸாதிகே।

சரண்யே த்ர்யம்பகே கௌரி நாராயணி நமோஸ்துதே ।

शरणागतदीनार्तपरित्राणपरायणे ।

सर्वस्यार्तिहरे देवि नारायणि नमोऽस्तु ते ।। ४ ।।

சரண கததீனார்த்த பரித்ராண பராயணே

ஸர்வஸ்யார்திஹரே தேவிநாராயணி நமோஸ்துதே ॥

सर्वस्वरूपे सर्वेशे सर्वशक्तिसमन्विते ।

भयेभ्यस्त्राहि नो देवि दुर्गे देवि नमोऽस्तु ते ।। ५।।

ஸர்வஸ்வரூபே ஸர்வேசே ஸ்ர்வசக்தி ஸமன்விதே ।

பயேப்ய ஸ்த்ராஹி நோ தேவி துர்கே தேவி நமோஸ்துதே ॥

रोगानशेषानपहंसि तुष्टा रुष्टा तु कामान् सकलानभीष्टान्
त्वामाश्रितानां न विपन्नराणां त्वामाश्रिता ह्याश्रयतां प्रयान्ति ॥ ६ ॥

ரோகா நசேஷான பஹம்ஸி துஷ்டா ருஷ்டா து காமான் ஸகலான பீஷ்டான் ।
த்வாமாச்ரிதாஞம் ந விபந்நராஞம் । த்வாமாச்ரிதா ஹ்யாச்ரயதாம் ப்ரயாந்தி ।

सर्वाबाधाप्रशमनं त्रैलोक्यस्याखिलेश्वरि ।
एवमेव त्वया कार्यमस्मद्वैरिविनाशनम् ॥ ७ ॥

ஸர்வ பாதாப்ரசமனம் ஸத்ரைலோக்யா கிலேச்வரி ।
ஏதமேவ த்வயா கார்யமஸ்மத்வைரி விநாசனம் ॥

(इति श्रीसप्तश्लोकी दुर्गा सम्पूर्णा)

(இதி ஸ்ரீஸப்தச்லோகீ துர்கா ஸம்பூர்ண) ॥)

உ

ஸ்ரீராமஜயம்

ஓம் தும் துர்காயை நம :

தேவி தபோவனம் என்கிற அம்மங்குடி

ஸ்தல வரலாறு

சோழநாடு சோறுடைத்து என்பர். உணவு மாத்திரம் போறுமா? சோழ நாடு பல புண்ணிய ஸ்தலங்களும் தீர்த்தங்களும் கொண்ட நாடாகும். புண்ணிய காவிரி நதியால் பேறு பெற்ற நாடாகும். இம்மைக்கும் மறுமைக்கும் பேறு செய்யும் நாடாகும்.

இந்த பிரதேசத்தில் பல புண்ணிய ஸ்தலங்களில் தேவிக்கு உகந்த தலை சிறந்த க்ஷேத்திரங்களில் ஸ்ரீதுர்கைக்கு ஏற்பட்ட க்ஷேத்திரமான அம்மன்குடியும் ஒன்று. இங்குள்ள துர்கா க்ஷேத்திரம் யுகாந்திரங்களாக பெருமை வாய்ந்ததாகும். ஸ்தலம், மூர்த்தி, தீர்த்தம், விருக்ஷம் முதலியவைகளால் மகா புகழ் பெற்றது. பிரம்ம: (தேவி நாரத சம்வாதமாய்) கைவர்த்த மஹா புராணத்திலும் ஸ்காந்த மஹா புராணத்திலும் இந்த க்ஷேத்திரத்தின் மகிமை விரிவாய் கூறப்பட்டுள்ளது. இங்கு ஸ்ரீதுர்கா தேவி, ஸ்ரீகைலாச நாதர், ஸ்ரீ பார்வதி, ஸ்ரீதபஸ் விக்ன ஹர விநாயகர், ஸ்ரீசூரியன் ஆகிய தேவதைகளை பிரதிஷ்டை செய்து தபஸ் செய்ததை இப்புராணங்கள் கூறும்.

பிரும்ம: கைவர்த்த புராணத்தில் லீலா விலாச விபினம் என்ற துர்கா புர மகாத்மியம் பரமேச்வரன் உமாதேவிக்கு எடுத்து உரைத்ததான சகல பாவங்களிலிருந்தும் விடுவிக்கும் ஸகல க்ஷேமங்களையும் கொடுக்கும் ஸ்ரீதுர்கா தேவியின் பரிபூர்ண அநுக்கிரஹத்தை அளிக்க வல்லதுமான சரித்திரம் நைமிசாரண்யர் வாசிகளான மகரிஷிகளால் பிரார்த்திக்கப்பட்டு ஸ்ரீசூத புராணிகரால் விஸ்தாரமாக எடுத்துரைக்கப்பட்டு இருக்கிறது.

புராணிகர், ஸ்ரீபார்வதி தேவி பரம சிவனிடம் ஸர்வ லோகத்திற்கும் ஸகல க்ஷேமத்தையும் அளிக்கவல்ல துர்காம்பிகையினுடைய வைபவத்தைக் கூறி எந்த மிக புண்யம் வாய்ந்த க்ஷேத்திரத்தில் மஹிஷா ஸுரமர்த்தினி ஆனந்திக்கப்பட்டவளாய் ஸகல விதமான சிரேயஸை யும் அடைந்து பிறருக்கும் அளிக்க வல்லவளாய் இருக்கிறாள், அதை தாங்கள் எனக்கு கூற வேண்டும். நான் அங்கு சென்று அவளை தரிசிக்க வேண்டும் என்று வினவ தேவேசன் ஸ்ரீ துர்காம்பிகைக்கு மஹிஷா ஸுரவதத்தினால் அவள் தேஹத்தில் ஏற்பட்ட தாபத்தை பாடலீவனம் என்கிற க்ஷேத்திரத்தில் தன்னை (தேவேசனை) விதிப்படி பூஜித்து நிவர்த்தித்துக் கொண்டதையும் அந்த க்ஷேத்திர மகிமையையும் விஸ்தாரமாய் எடுத்துரைத்தார் என்பதை கூறினார். அதன் மீது மஹரிஷிகள் மறுபடியும் ஸ்ரீசூதபுராணிகரை நோக்கி எந்த துர்கா தேவியை ஸகல ஜனங்களும் பிரீதி செய்து ஸகல அபீஷ்டங்களையும் பெற்றார்களோ அந்த துர்காதேவிக்கு மஹிஷா ஸுரவதத்தினால் என்ன தோஷம் ஏற்பட்டது என்பதை விபரமாய் கூறவேண்டும் என பிரார்த்திக்க அவர் கூறுகிறார். லவணன் என்கிற மஹா கொடிய அசுரன் தேவர்களையும் நரர்களையும் மிகக் கொடுமைப் படுத்தினான். அவனால் அவனைக் காட்டிலும் கொடுமை வாய்ந்த மஹிஷாசுரன், சும்பன் நிசும்பன் சிம்மவக்த்ரன் தூம்ரலோசனன் மதுகைடபன், சண்டமுண்டன் ரக்தபீஜன் முதலிய அசுரர்கள் உற்பத்தி செய்யப் பெற்றார்கள்.

எல்லோருக்கும் முதலில் பிறந்த மஹிஷா ஸுரன் இந்த கொடிய அரக்கர் குழாம் சூழ கடும்தவம் புரிந்து ஸ்ரீசங்கரனிடமிருந்து பல வரங்களைப் பெற்று, தன்னை யாரும் ஜெயிக்க முடியாத வரன்களையும் அடைந்து மூன்று லோகங்களிலும் உள்ள ரிஷிகளையும், ஸாது ஜனங்களையும் ஸ்த்ரீகளையும் மேலும் மேலும் மஹிஷாஸுரனும் அவன் கூட்டமும் ஹிம்ஸித்தார்கள் இந்திரன் முதலானோரை பதவி இழக்கச் செய்தும் மற்ற விதங்களிலும் கொடுமை படுத்தினார்கள். இதைப் பொறுக்க முடியாத தேவர்கள் பிரும்மா முதலியோர்

Best wishes from

M/s. South India Steel Centre

41-B, Raghunayakulu Street

MADRAS-600 003

Phone : 564415

Phone : 661361

With best compliments from

FRUITNIK

- MANGO
- PINEAPPLE
- GRAPE

Mfs. Siva's Beverages

172, Poonamallee High Road
MADRAS-600 010

WITH BEST COMPLIMENTS FROM

Senthil Agencies
Enmeena Enterprises

54-A, Banadurai North Street
KUMBAKONAM

களுடன் ஆலோசித்து முடிவே ஒன்றும் தெரியாமல் முப்பத்து முக்கோடி தேவர்களுடன் ஸ்ரீ துர்க்கையை சரணடைந்து துக்கத்தை துடைக்க எண்ணம் கொண்டார்கள். வேறு எவராலும் ஆகாது எனத் தீர்மானித்த அவர்கள் முப்பெரும் தேவர்களோடும் கைலாச பர்வதத்தில் 18 கோடி கனங்களால் சேவிக்கப் படும் ஸ்ரீ ஸிம்மவாஹினியை பக்தியுடன் பாதத் தில் சரணடைந்து இவ்வாறு துதிக்கலானர்கள்.

நமஸ்தே தேவி கல்யாணி
நமஸ்தே பக்த வக்தஸலே
நமோம்பிகே ஜகன்மாத :
நமோ வேதாந்த வேதினி
நம காருண்ய தேஹாயை
நம த்ரிநயனப்ரியே
நமஸ்தே சூல ஹஸ்தாயை
ஸர்வ தேவாயை நமோ நம :
மஹிஷா ஸுர பீதானும்
அஸ்மாகம் ரக்ஷிணும் க்ருபாம்
குரு கல்யாணி தேவேசி
பக்த ரக்ஷண ததிபரே.

இப்படி துதிக்கப்பட்ட துர்காதேவி யானவள் அவர்கள் துக்கத்தை போக்க எண்ணம் கொண்டு இனிமையான புன்சிரிப் புடன் ப்ரும்மாதி தேவர்களுக்கு அபயம் அளித்து அசுரனை அழித்து அகிலத்தை காக்க அனுக் ரஹித்தாள். அசுரன் அழியப் போவதால் அவர்களும் ஆனந்தத்துடன் சென்றார்கள்.

பிறகு பெருத்த சிம்மத்தில் ஏறி கோடி கன்னிகைகள் புடைசூழ கஜவக்த்ரன், வீரபத்ரன், பைரவன், சாமுண்டி பத்ரகாளி மற்றும் ஏழு மாத்ருகணங்களுடனும் இந்திராதி தேவர்களோடும். 18 கணங்களும் புடைசூழ மஹிஷாஸுரனை நோக்கி கிளம்பினாள்.

ஏழு பிராகாரங்களும், ஐந்து வாயில்களும், கோடி சிவாலயங்களும், மூன்று கோடி அரச மாளிகைகளும், இரண்டு லக்ஷம் வீதிகளும் கொண்ட பதினாயிரம் அகழிகளால் சூழப்பட்ட மஹிஷபுரத்தில் 16 கோடி அசுரர்களால் சூழப்பட்டு இரத்தின மண்டபத்தில் இருந்த மஹிஷாஸுரனை கொம்பை பிடித்து இழுத்து துவந்தயுத்தம் செய்யலானாள். கோபங் கொண்டு துர்கையை கொல்ல நினைத்த அசுரனை கோபங்கொண்ட துர்காதேவி சர்வ ப்ராணங்களினாலும் ஜ்வலிக்கும் தேஹத்தோடு புருவத்திலேற்றிய கண்களோடு இடது கையால் தலையைப் பிடித்து, காலினால் தேஹத்தை மிதித்து, வலது கையிலுள்ள சூலத் தினால் வதம் செய்தாள்.

அந்த அசுரவதத்தினால் தேஹத்தில் ஏற்பட்ட தாபத்தை தணிக்க தேவேசனை சரணடைந்து துதிக்கலானாள்.

ஹே தேவா என்னுடைய சரீரத்தில் மஹிஷாசுரவதத்தினால் ஏற்பட்ட தாபத்தின் கொடுமையை தணிக்க என்ன செய்வேன்? எங்கு செல்வேன்? தாங்களே போக்கவல்லவர். தங்களை சரணடைந்தேன். அனுக்ரஹிக்க வேண்டும் என்று வேண்ட ஈசுவரன் ஹே! கல்யாணி! உன்னால் தேவகாரியம் செய்யப் பட்டது. பயத்தை விடு. புண்ய தீர்த்தாடனத் தினாலும், க்ஷேத்திராடத்தினாலும் தாபம் தீரும் பூமிக்கு சென்று இவைகளை செய்வாயாக என அருளினார். அதன் பிரகாரம் தேவி பிரயாகை காசி சென்று விதிப்படி ஸ்நானம் செய்து விஸ்வேஸ்வர பூஜை செய்து பிறகு ஹரித்வாரம் முதலிய பல பல புண்ணிய தீர்த்த கட்டங்களில் ஸ்நானம் செய்து பல புண்ணிய க்ஷேத்திரங் களையும் தரிசித்து தென்திசை அடைந்து காளஹஸ்தி காஞ்சி க்ஷேத்திரங்களையும் தரிசித்து விருத்தாஜலம், வைத்தியநாதம், காளீபுரம் ஸ்வேதவனம் சாயாவனம் வழியாக காவேரிதீரம் அடைந்து மேற்குபுறம் திரும்பி மாயூரம் முதலிய பல க்ஷேத்திரங்களை தரிசித்து மத்யார்ஜுனம் அடைந்து நாகேஸ்வரம் வழியாக சிவபுரம் சென்று கும்பகோணம் அடைந்து பின் சுவாமிமலை வழியாக தென் பாகம் திரும்பி பஞ்சநதக்ஷேத்ரம் கிருதேஸ்வரம் ஸ்ரீகண்டம் அடைந்தாள். காசிக்கு ஈடான ஸ்ரீவாஞ்சியம் கௌதமேஸ்வரபுரம் அடைந்து கௌதம ரிஷியால் சொல்லப்பட்ட ஸ்தலவாசம் முதலிய செய்து பாடலீவனத்தை அடைந்தாள். சில தினங்கள் இங்கு தங்கி புகழ்பெற்ற விருஷப தீர்த்தத்திலிருந்து உண்டான ஹரிநதி (அரசலாறு) தீர்த்தம் சென்று மஹா சந்தோ ஷம் அடைந்து ஹரி நதியில் சங்கல்ப ஸ்நானம் செய்து அதைக் காட்டிலும் புண்ணியமான பிர்ம தீர்த்தம் தேவ தீர்த்தம் பாபவிநாச தீர்த்தத்தில் ஸசேல ஸ்நானம் செய்து ஜோதிர்மய மஹாலிங்கத்தை தனது சாந்திக் காக பக்தியோடு பஞ்சாமிர்தம், பஞ்சகவ்யம் இளநீர், சந்தனம் பால் நெய் தேன் கரும்பு ரஸம் முதலியவைகளால் மஹா அபிஷேகம் செய்து பாலன்னம் முதலிய பலவித அன்னங்களை தேவேசனுக்கு அர்ப்பித்து விதி முறைப்படி ஸ்தோத்திரம் 1008 பிரதிக்ஷணம் செய்து நமஸ்கரித்து, பாபவிநாச தீர்த்தத்தில் தன்னுடைய பெயரால் கங்காதி முதலிய எல்லா தீர்த்தங்களையும் ஆவாஹனம் செய்து, மூன்று வேளையும் ஸ்நானம் செய்து, பஞ்சா க்ஷரம் ஜபம் செய்து தபஸ் செய்து வந்தாள்.

PRADEEP DRUG COMPANY

MANUFACTURERS OF BULK DRUGS

Viz.

Ethambutol Hydrochloride IP,

Chloromphenicol IP,

Erythromycin Stearate IP,

Magaldrate USP, Mebendazole USP.

Office:

268, LLOYDS ROAD
MADRAS-600 014

Phone: 476261 & 478973

Factory:

A 9 & 10 SIDCO INDL ESTATE
MARAIMALAI NAGAR
CHINGLEPUT DISTRICT

Phone: 95

இவ்விதம் பல ஆண்டுகள் தபஸ் செய்யும் தேவியானவள் ஒருசமயம் பூஜை முடிவில் தேவேசனை இவ்வாறு ஸ்தோத்ரம் செய்தாள்.

தேவ தேவ நமஸ்தேஸ்து நமஸ்தே
பக்தவக்த்ஸலா
நம: பரம கல்யாண நிதயே பரமாத்மனே
நம: பரமரூபாய நமோ வேதாந்த
வேதினே
பூதானும் பதயே துப்யம்
அன்னனும் பதயே நம:
நமோ பீரம்ஹ ஸ்வரூபாய
நமோ விஷ்ணு ஸ்வரூபிணே
நமஸ்தே ஸர்வ தேவானும்
ஆதி கர்த்ரே நமோ நம:
ஆஹாச ரூபிணே துப்யம்
நம ஆனந்த ரூபினே
ஆதி மத்யாந்த ஹீநாய
யோக கம்யாய நமஸ்தே நம:
வஸதே பக்வ சிந்தானும்
ஹ்ருதயே யோகினமபி
நாகா பரண பூஷாய
நாக யக்ஞோப வீதினே
ஸ்ருஷ்டி ஸ்த்தி அனுஸம்ஹாராத்
மனஸா குருதே ஸதா
ரக்ஷ ரக்ஷ மஹா தேவ
க்ஷமஸ்வ கருணலயா
பக்த சித்த ஸமாதின பிரும்ப விஷ்ணு
சிவாத் மஹ த்வாமேவ சரணம் தேவா
த்வாமே சரணம் கதா
த்வத் பாத பங்கஜம் பிரப்தாம்
ரக்ஷமாம் கருணநிதே.

இவ்வாறு தேவியால் ஸ்தோத்ரம் செய்யப் பட்ட மஹாதேவன் நாகா பரணரூடராய் உமா நந்தி சஹிதனுக தேவகணங்களால் சூழப்பட்டு ரிஷிகளால் சேவிக்கப்பட்ட வருமான தேவதேவன் விருஷபாரூடராய் தரிசனம் கொடுத்தார்.

ஹே கல்யாண சீலே உன்னுடைய தவம் ஸ்தோத்ரம் பூஜை ப்ரதிக்ஷிணம் முதலியவை களால் நான் சந்தோஷம் அடைந்தேன். உனக்கு வேண்டிய வரங்களைக் கேள் என்றவுடன் தன் சரீரத்தில் ஏற்பட்ட பொறுக்க முடியாத தாபத்தை போக்க வேண்டினள். அவ்வாறே ஆகட்டும் என்று தன் ஹுங்கார சப்தத்தினல் தாபத்தை போக்க அவ்வமயம் தேஹகாந்தியுடன் பிரகாசிக்கும் தேவி கை கூப்பி தேவனை வேண்டலானள்.

தேவ தேவ என்னுடைய ஆபத்தை தீர்த்த தாங்கள் தங்களை எவர்கள் இங்கு பூஜிக்கிருர் களோ அவர்களுக்கு ஸகல க்ஷேமங்களும் உண்டாக வேண்டுமென பிரர்த்திக்க ஈசனும் அவ்வாறே அருளினர் என சூத புராணிஹர் கூறலானர்.

தேவிக்கு நாரதரும் கழுத்தில் சிவலிங்கத் தை உடைய அசுரவதம்தான் உபாதைக்கு காரணம் என கூறி காவேரி தீரத்தில் மிக புண்ணிய ஸ்தலமான மத்யார்ஜுன க்ஷேத்ரத் திற்கு தெற்கிலும் திருநாகேசுவரத்திற்கு கிழக்கிலும் உள்ள தபோவனத்தில் மஹிஷா ஸுரன் கழுத்திலிருந்த லிங்கத்தை ஸ்தாபித்து பூஜிப்பாயாக என கூறினர். உன்னல் பூஜிக்கப் பட்டு ஹரித்ரா நதியின் வடக்குப் பாகத்தில் துர்கேசன் என பெயரடைந்து புகழ் அடையப் போகிறது என கூறினர்.

அம்பாளும் அவ்விதமே தரன் ருத்ராக்ஷம் த்ருபுண்ட்ரம் இவைகளுடன் தேவதேவனை பூஜித்து அருள்பெற்றுள். அசுரவதத்தினல் ரத்தம் தோய்ந்த சூலத்தையும் நனைத்ததான ரத்தக்கரையும் மறைந்தது தேவியின் தோஷத் தை போக்கடித்த அந்த தீர்த்தம் பாப சங்கஷாடண தீர்த்தம் என்று புகழுடைய தாயிற்று. அந்த தீர்த்தத்தில் செவ்வாய் கிழமைகளில் ஸ்நானம் செய்து ஸேவிக்க ஸகல விதமான நரர்களும் எல்லாவிதமான இஷ்ட காம்யார்த்தங்களையும் அடைகிருர்கள். மஹிஷாஸுரனுடைய கண்டத்திலுள்ளலிங்கத் தை கைலாஸநாதர் என பெயரிட்டும், தபஸ் விக்ன ஹர விநாயகரையும் கையில் தாமரை யோடு கூடிய சூரியனின் மூர்த்தியையும் பிரதிஷ்டை செய்து தேவி பல வருடங்கள் தபஸ் இயற்றினள். தன் சரீரத்தில் ஏற்பட்ட உபா தையை பாம்பு சட்டையை உரிப்பதுபோல போக்கடித்துக் கொண்டாள் என்பதை முன் பார்த்தோம்.

இவ்வாறு தேவி ஸ்நானம் பூஜை தபஸ் செய்த காரணத்தினல் அந்த ஸதலம் தேவி தபோவனம் என புகழடைந்தது. இங்கு வசிப் தாலும், தரிசிப்பதாலும், பூஜிப்பதாலும் ஸர்வ பாபங்களும் நசித்து ஸர்வாபீஷ்டங்களும் உண்டாவதாக சூத புராணிகர் கூறலானர்.

இந்த ஸதல புராணம் மேலும் பலர் தன்னுடைய என்ன என்ன மஹா பாபங்களை எப்படி எப்படி போக்கிக் கொண்டார்கள் எனவும் தங்கள் ஆபீஷ்டங்களை அடைந்தார்கள் என்பதையும் கூறுகிறது. ஸ்ரீதுர்கை அஷ்ட புஜங்களுடன் காட்சி கொடுக்கிருள். சங்கு, சக்ரம் வில் அம்பு கேடயம், சூலம் வஜ்ராயுதம் முதலியவை அம்பாள் கைகளிலுள்ள ஆயுதங் கள். மூர்த்தி ஸாலிக்ராம சிலாரூபம் ஒருகை மஹிஷனின் தலையில் அனுக்ரஹ பாவனை,

அம்மன்குடி ஸ்ரீ துர்காதேவியின் கருணையில்
உலகு சிறக்க வேண்டுகிறோம்.

உயர்ந்தரக வெள்ளி ஜரிகை பட்டுசேலை
உற்பத்தியாளர்கள்

பாலவிலாஸ், கும்பகோணம்

ஸ்ரீ சரஸ்வதி சில்க்ஸ், கும்பகோணம்

ரெங்கா எண்டர்பிரைசஸ், கும்பகோணம்

உரிமையாளர்கள்: கே. கே. ரெங்காச்சாரி & சன்ஸ்

Estd. 1883 103rd Year Phone: 475681

The Nungambakam Saswatha Dhana Rakshaka Nidhi Limited

"N.S.D.R. Nidhi Building" 11, Rama Naicken St, Nungambakam, Madras-600034

The Nidhi receives from its Members variours kinds of DEPOSITS at the following INCREASED RATES

I. CASH CERTIFICATES SCHEME

Minimum amount Rs.	Period	Amount payable on maturity Rs.
1,000	24 Months	1,320
1,000	36 Months	1,550
1,000	60 Months	2,100

II. FIXED DEPOSITS

Period in months	Below Rs. 25,000	Rs. 25,000/- to Rs. 49,999/-	Rs. 50,000/- and above
12	12%	13%	14%
24	12½%	13½%	14½%
36	13½%	14%	15%
60	14%	15%	15½%

"INTEREST PAYABLE MONTHLY"

III. RECURRING DEPOSITS

If subscribed at Re. 1/- per month (Minimum Rs. 5/-)

For Months	Guaranteed Interest (Rs.)	For Months	Guaranteed Interest (Rs.)
24	3 50	72	33 00
48	14 30	96	60 00

IV. SAVINGS DEPOSITS

Interest allowed at 6½% per annum.

MORTGATE LOANS on House properties within the CITY and JEWEL LOANS are granted to Members

Please contact the SECRETARY for full particulars.

E. D. RAMAMURTHI, President.

வலக்கால் ஊன்றியும், இடக்கால் மஹிஷனின் உடல் மேலும் உள்ளது. எல்லா தேவர்களும் வணங்கி அர்ப்பணித்த ஆயதங்களுடனும் தேஜஸுடனும் அருளாட்சி புரிகிருள். கோவிலி லுள்ள மற்ற எல்லா மூர்த்திகளுமே கண்ணுக்கு ஓர் விருந்து. உய்வுக்கு ஓர் சாதனம். சூரியனின் பிம்பம் ஓர் அபூர்வபடைப்பு. ஸ்ரீ தக்ஷிணமூர்த்தி விருஷபா ரூடராய இருப்பதும் சனகாதிகள் இல்லாமல் இருப்பதும் ஓர் விசேஷ அம்சம்.

ஓர் அரசன் தன் வினைதீர்ந்ததின் காரண மாக ஏழு கிராமங்களை தானமாக கொடுத்த தாக கூறுகிறது. (ஏழுகட்டளை கிராமங்கள் இருப்பதை நோக்கவும்) ஓர் அரசன் செவ்வாய் கிழமையும் அசுவணி நக்ஷத்திரமும் கூடிய தினத்தில் பூஜை செய்து. பாயஸம் நைவேத் தியம் செய்து துன்பம் நீங்கியதாகவும் வரலாறு

ஸ்ரீருத்ரனே திருபுர ஸம்ஹாரத்திற்கு பிறகு இந்த க்ஷேத்திரத்தில் ஸ்நானம் செய்து தோஷத்தைப் போக்கிக் கொண்டதாக புராணம்

இந்த தேவி தபோவனம் மஹிமை கூறற் பாலது அல்ல. முன்சொன்னது போல் இந்த க்ஷேத்திரத்தை நினைத்தாலும், பார்த்தாலும் இங்கு ஸேவித்தாலும் எல்லா பாபமும் நீங்கி ஸர்வாபீஷ்டமும் ஏற்படுகிறது. கிருஷ்ணபக்ஷ சதுர்தசியும், செவ்வாய்கிழமையும் சேர்ந்தால் இந்த ஸ்தலத்தில் கிருஷ்ணங்காரஹ சதுர்தசி விஷேசம். இங்கு துர்காதேவி கைலாச நாதர் சன்னதிக்குப் பக்கத்தில் தென்புறம் கிழக்கு நோக்கி கோயில கொண்டுள்ளது ஓர் சிறப்பு அம்சம். இந்த ஸ்தலத்தின் ஸ்தலவிருக்ஷம் வில்வம். நவக்ரஹங்களுக்கு இங்கு தனி சன்னதி கிடையாது. அவர்கள் ஸ்ரீ துர்கையில் அடக்கம்

இவ்வாறு யுகாந்தரங்களாய் புகழ் வாய்ந்த இந்த க்ஷேத்திரத்திலுள்ள கோயில் கி.பி. 994ல் ராஜராஜ சோழனின் சேனதிபதி, திருமந்திர ஓலை நாயகம், குந்தவை விண்ணகர நிர்வாகி ஆகிய முக்கிய பதவிகளை வகித்து அரச சபையில் முக்கிய பொறுப்பேற்றிந்த மும்முடி சோழ பிரும்மமாருயன் என்கிற கிருஷ்ணன் ராமன் என்பவரால் கருங்கல் கோயிலாக நிர்மானிக் கப்பட்டது. அவர் அம்மன்குடியைச் சேர்ந்த அந்தணர். அவர் காலத்தே இந்த ஊர் கேரளாந்தக சதுர்வேத மங்கலம் எனவும் பெயர் பெற்றிருந்து. ஆகையால் இவ்வூரில் கற்றறிந்த சான்ரோர்கள் வாழ்ந்தனர் என்பது தெளிவு. 'மும்முடி சோழன்' 'கேரளாந்தகன்' என்பவை ராஜராஜனின் சிறப்புப் பெயர்கள். இந்தக் கோயிலுக்கு ''ராஜராஜேஸ்வரம்'' எனவே பெயரிட்டார். கிருஷ்ணன் ராமனின் புதல்வர் கோவிந்தன் ராமனும் முதலாம் ராஜேந்திர சோழ மன்னன் காலத்தில் சேனதிபதி முதலிய பதவிகளை வகித்தது குறிப்பிடத்தக்கது.

சோழ மன்னர்கள் காலத்தில் இந்த ஊர் உய்யக்கொண்டான் வளநாட்டில் (காவேரிக் கும் அரசலாற்றிற்கும் இடைப்பட்ட பிரதேசம்) வேணுடு என்ற பிரிவின் கீழ் இருந்ததாகக் குறிககப்படுகிறது. வேணுடு என்பது பல புண்ணிய க்ஷேத்திரங்கள் உள்ள பிரதேசம் என்பது காஞ்சி பரமாசாரியாளின் விளக்கம்.

கிருஷ்ணன் ராமனும் மற்றும் சிலரும் இந்தக் கோயிலுக்கு பல மானியங்கள் கொடுத்து பற்பல நிபந்தங்கள் ஏற்படுத்தி உள்ளார்கள்.

கல்வெட்டுகளிலிருந்து கிடைக்கும் சில தகவல்கள் மஹாசபை என்று ஒரு நிறுவனம் இருந்ததாகத் தெரிகிறது.

1. ''அணையா விளக்கு'' ஒன்று கோயிலில் எப்பொழுதும் எரிய ஏற்பாடு இருந்து இருக்கிறது.

2. தினசரி மூன்று சிவயோகியாருக்கு கும்மாயம், மிளகுபொடிக்கரி, புளித்தகரி நெய தயிருடன் பிராகாரதத்தில் உணவு அளிக்க மான்யம் உண்டு.

3. தினசரி பானை கொடுக்கும் குயவருக்கு மான்யம்.

4. ஓதுவார் நாட்டியக்காரர் மாலை கட்டுபவர் வாத்தியம் வாசிப்பவர்களுக்கு மான்யம். இது மாதிரி பல மான்யங்கள்

5. நந்தவனத்துக்கு மானியம் உண்டு என கல்வெட்கள் தெரிவிக்கின்றன. பல கல்வெட்டுகள் சிதைந்து போய்விட்டதால் விபரங்கள் கண்டுகொள்ள முடியவில்லை.

6. மாராயன் சோழகுல சுந்தரி என்பவர் சித்திரை திருவிழா (பிர்மோற்சவம்) ஒன்பது நாட்களும், 1000 பேருக்கு நான்கு கரி, நெய், தயிருடன் உணவு அளிக்கவும், எட்டு வெற்றிலை நான்கு பாக்கும் கொடுக்க ஏற்பாடு செய்துள்ளார். ஊர்சபை, ராஜேந்திர சோழன் வாய்க் கால், மும்முடி சோழன் வாய்க்கால் என வாய்க்கால்கள் பற்றி குறிப்புகள் உள்ளன. நந்தவன நிலத்திற்கு வரி விலக்கு கொடுக்கப் பட்டிருக்கிறது.

With best compliments

from

M/s. Heat Treatment Services

H-6, Industrial Estate

Ambattur, Madras-600 058

தினசரி மஹாபாரத பாராயணத்திற்கு வகை செய்யப்பட்டிருக்கிறது. காஞ்சி பரமாசார்யாள் ஒரு உபன்யாஸத்தில் முக்கிய மான கோவில்களில் அவசியம் மஹாபாரத பாராயணத்திற்கு ஏற்பாடு இருந்து வந்தது என்று கூறியிருப்பது இங்கு சிந்திக்கத்தக்க விஷயம்.

சித்திரை திருவிழா நடந்து இருப்பதால் இக்கோயிலில் ராஜகோபுரம், த்வஜஸ்தம்பம், கோயில் குளம் இருந்திருக்க வேண்டும். இதுவும் நினைவிற்கொள்ள வேண்டிய ஒரு விஷயம்.

இந்த ஊரில் தென்பால் உள்ள ''ராம தேவர்'' கோயிலுக்கும் கிருஷ்ணன் ராமன் மற்றும் ஒரு சோழ அரசன் சில நிபந்தங்கள் ஏற்படுத்தியுள்ளது தெரிய வருகிறது. இது ஓர் மிக அழகிய சன்னதி. தற்சமயம் திருப்பணி செய்ய வேண்டிய நிலையில் உள்ளது.

இச்சிறிய வரலாறு ஊரின் அக்காலத்திய பெருமையையும் ஸ்ரீ பார்வதி சமேத ஸ்ரீ கைலாசநாதர் துர்கா பரமேஸ்வரி தபஸ் விக்ன ஹர விநாயகர், ஸ்ரீ சூரியன் முதலிய தேவதைகளின் மஹிமையையும் ஓரளவுக்கு எடுத்துக்காட்டும். ஸ்தல வரலாற்றை எடுத்துரைக்கும் இதன் ஏட்டுச் சுவடி முழுவதும் பக்தர்களின் க்ஷேமத்திற்காக விரைவில் அச்சேற அம்பாள் அருள்பாலிக்க வேண்டும்.

இச்சிறந்த கோயிலின் அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகம் 30-4-86ல் அம்பாளின் திருவுளப்படி ஆகம சாஸ்திரப்படி மிகச் சிறந்த முறையில் நடந்தது. அம்பாள் எல்லா பக்த கோடிகளுக்கும் தன் அருளை வாரி வழங்க பிரார்த்திப்போம். கோவில் மேலும் மேலும் சிறந்த முறையில் வளர்ந்து பக்தர்கள் உய்வுற அம்பாளின் அருளை வணங்கி வேண்டுவோம்.

★

பின் குறிப்பு : கோவிலில் பிராகாரதள வரிசை வேலை இன்னும் சில வெளி வேலைகள் திருப்பணியில் பாக்கி உள்ளன. சுமார் ரூ. 80000க்கு மேல் தேவைப்படும். பக்தர்கள் இந்தப் பணிகளில் ஈடுபட கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

நித்திய கால பூஜை நிதி ஏற்பாடு செய்யப்பட உத்தேசித்து இருக்கிறது. அதிலும் ஈடுபட்டு அம்பாள் அனுக்ரஹத்தை பெறக் கோருகிறோம்.

With Best Compliments
from

K. NACHIAPPAN, B.E.,
CIVIL ENGINEERING CONTRACTOR

O-3, Lloyds Estate
Royapettah, Madras-600 014

With best compliments from

M/s. SARAVANA CONSTRUCTIONS

REGD. CONTRACTORS

P.W.D., RAILWAYS & T.N.H.B.

Branch Office:

M/s. Kalaivani Enterprises

Cuddalore Main Road

Attur P.O.

Salem Dt.

WITH BEST WISHES

LAKSHMI COLOUR PRINTERS

37 Mahalakshmi Street
T Nagar
Madras 600 017

Phone 446946

WITH BEST COMPLIMENTS FROM

Bharathwaja Enterprises

No. 854, MOUNT ROAD
MADRAS-600 002

**Dealers in
Scientific Electrical &
Industrial Products**

For all your Video coverages & photographs such as weddings, seminars, parties, conferences etc.

Please contact

VIR VIDEO VISION

29, 1st FLOOR
NEW GEMINI PARSN COMPLEX
MADRAS-600 006

With Best Wishes

MIKETRONICS

**Electrical & Electronics
Service Engineers**

U-2, NANDANAM
MADRAS-600 035

Phone: 453813

Arulmigu Sri Kailasanathar - Durga Parameswari Temple

AMMANGUDI - KUMBAKONAM TALUQ - TANJORE DT.

ஸ்ரீ துர்கா பரமேஸ்வரி ஆலயத்தை 994 AD-யில் கட்டிய
க்ருஷ்ணன் ராமன் மும்முடி சோழ பிரம்ம மராயர்.

KRISHNAN RAMAN MUMMUDI CHOLA - BRAHMAMARAYAN.

who built the KAILASANATHAR - DURGA - PARAMESWARI
TEMPLE AT AMMANGUDI IN 994 AD.

He was commander - in - chief and later chief Secretary to
Raja Raja Cholan I and his Successors.

மும்முடி சோழப் பிரம்ம மாருயன்

சோழர்கள் வரலாற்றில் தந்தையும், மகனும் சோழ மன்னர்களுக்குக்கீழ் சிறந்த பதவிகளில் பணியாற்றி பெருமை சேர்த்தவர் கள் இருவர் மட்டுமே. அந்த இருவர் நராக்கண் மும்முடி சோழ பிரும்ம மாருயன் என்னும் கிருஷ்ணன் ராமன் அவர் மகன் நராக்கண் கொற்றன் அருள்மொழி ஆகிய உத்தம சோழ பிரும்ம மாருயன்.

இராஜராஜன் இராஜேந்திரன் இராஜாதி ராஜன் என்னும் முப்பெரும் மன்னர்களிடமும் பணிபுரிந்தவர் மும்முடி சோழ பிரம்ம மாருயன் மும்முடி சோழ பிரம்ம மாராயன் என்பது இவருக்கு வழங்கிய பட்டப் பெயர். பிரம்ம மாருயன் என்பதால் இவர் அந்தணன் என்பது புலனுகிறது. நராக்கண் என்பது குடிப்பெயர். இக்கிருஷ்ணன் ராமன்......

இக்கிருஷ்ணன் இராமன் சோழ மண்டலத்து உய்யக் கொண்டார் வளநாட்டு, வெண்ணுட்டு அமன்குடியாகிய கேரளாந்தக சதுர்வேதி மங்கலத்தில்ல பிறந்தவர்-1, அமன்குடி எனும் ஊர் தற்போது (கும்பகோண த்திற்கருகில்) அம்மங்குடி என்ற பெயரில் அழைக்கப்படுகிறது. கி. பி. 1009ல் வெட்டப் பட்ட முதல் இராஜராஜனின் கல்வெட்டுக்களில் குறிப்பிடப்படும் கிருஷ்ணன், இராமன், தொடர்ந்து இராஜராஜனது கல்வெட்டுக்கள், இராஜேந்திரனது கல்வெட்டுக்களில் குறிப் பிடப்பட்டு இறுதியாக கி. பி. 1041ல் வெட்டப் பட்ட இராஜாதிராஜனின் கல்வெட்டுக்களிலும் குறிப்பிடப்படுகிறார். எனவே, கி. பி. 985 முதல் கி. பி. 1054 வரை ஆட்சிபுரிந்த இராஜ ராஜன், இராஜேந்திரன், இராஜாதிராஜன் காலம்வரை மும்முடிச்சோழ பிரம்மமாராயனின் அரசியல் பணி தொடர்ந்தது என்பதை அறியலாம்.

தஞ்சை பெருங்கோயிலை தன் பெயரில் எடுத்த இராஜராஜன், இத்திருக்கோயிலின் திருச்சுற்ருலையை தனது சேனுபதி கிருஷ்ணன் இராமனைக் கொண்டு எடுக்கச் செய்தான். இதனை இத்திருச் சுற்ருலைத் தூண்களில் உள்ள கல்வெட்டு '......உடையார் ஸ்ரீராஜராஜ தேவர் திருவாய்மொழிந்தருள இத்திருச்சுற்று மாளிகை எடுப்பித்தான் ஸேநாபதி சோழ மண்டலத்து உய்யகொண்டார் வளநாட்டு வெண்ணுட்டு அமன்குடியான் கேரளாந்தகச் சதுர்வேதி மங்கலத்து ஸ்ரீ கிருஷ்ணன் இராமனன மும்முடி சோழப் பிரம்ம மாராயன்' என்று கூறுகிறது.

இவர் தஞ்சை பெருங்கோயில் திருச்சுற்று மாளிகையை எடுப்பித்ததோடல்லாமல் இவரது பிறந்த ஊரான ஸ்ரீதுர்கா தேவியின் தவத்திஞல் புராண சிறப்புப் பெற்ற அம்மன்குடியில் ''இராஜ ராஜேச்சரம்'' எனும் பெயரில் ஒரு சிறந்த சிவாலயமும் எடுப்பித்தார். இப்பணி களால் இவர் எந்த அளவுக்கு இராஜராஜனுல் மதிக்கப்பட்டார் என்பது நன்கு புலனுகும்.

கிருஷ்ணன் இராமன் இராஜராஜதேவரின் படைத் தலைவராக சேனுபதி பதவி மட்டு மின்றி, பெருந்தரத்து அதிகாரியான திருமந்திர ஓலை நாயகம் எனும் தலைமைச் செயலர் பதவியையும் வகித்தார் என்பதை கல்வெட்டுக்கள்-2, செப்பேடுகள்-3, வாயிலாக அறிய முடிகிறது. நாகப்பட்டினத்தில் கடாரத்து மன்னன் விஜயோத்துங்கவர்மனுல் கட்டப்பட்ட பௌத்த விகாரைக்கு இராஜ ராஜன் ஆனைமங்கலம் எனும் ஊர் உள்ளிட்ட 90 வேலி நிலத்தை அறக்கொடையாக நல்கினுன். இச்சாசனம் 36 செப்பேடுகளில் கிரந்தம், மற்றும் தமிழில் எழுதப்பட்டுள்ளது. இதனை ஆனைமங்கலம் செப்பேடுகள் என அழைப்பர். வரலாற்றுச் சிறப்புடைய இச்செப் பேட்டில் சாசனத்தில் கையொப்பமிட்டவர் களாக குறிப்பிடப்படும் பெரும்தரத்து அதிகாரி களுள் கிருஷ்ணன் இராமனும் ஒருவர்; இச் செப்பேடு தற்போது ஹாலந்து நாட்டில் லெய்டன் காட்சியத்திலுள்ளது.

உக்கலில் இராஜராஜனின் வரலாற்றுச் சிறப்புமிக்க ஆணை ஒன்று கல்வெட்டாக காணப்படுகிறது. இராஜராஜசோழன் கி. பி. 1009ல் தஞ்சாவூர் பெரிய செண்டு வாயில் சித்ரகூடத்துத் தெற்கில் கல்லூரியில் எழுந் தருளி இருந்து திருவாணை ஒன்று போக்கினுன். இந்த ஆணையின்படி சோழநாட்டிலும், பிற மண்டலங்களிலும், பிரமதேய மற்றும் வைகாசனஸ்ரமண ஊர்களிலும் நிலம் உடைய வர்கள் தன்னுடைய ஆட்சியில் 16 ஆம் ஆண்டு க்கும் 23 ஆம் ஆண்டுக்கும் இடையில் ஊர் சபை விதித்த வரியையும் (ஊரிடு வரிப்பாடு) அரசுக்கு செலுத்த வேண்டிய வரியையும் செலுத்தாமல், இரண்டாண்டு நிரம்பி, மூன்ருவது ஆண்டு தொடங்கியிருக்குமானுல், ஊர்ச்சபையார் நிலத்துக்கு உரியவனை வெளி யேற்றி நிலத்தை ஊர்ச்சபையார் நிலமாக்கி விற்றுக் கொள்ளவும், இந்த உரிமையை இனி வரும் ஆண்டுகளில் பெறவும் உத்தரவு பிறப் பித்தான். இச்சிறப்பினை ''திருவாய் மொழிந்

With best compliments

from

Sri Jain Traders & Co.,

Wheat, Rice and General Merchants

23, Strotten Muthiah Mudali St.,

MADRAS 600 001.

Phone No. 31607

தருளியபடி திருமந்திர ஓலை இராஜகேசரி நல்லூர் கிழவன் எழுத்தினுலும், திருமந்திர ஓலை நாயகன் மும்முடி சோழ பிரம்மராயனும், மும்முடிசோழ போசனும் ஒப்பிட்டு புகுந்த கேழ்விப்படி 24 ஆம் ஆண்டு நாள் 143னல் வரியிலிட்டது'' என்று கல்லில் பொறிக்கப் பட்டுள்ளது-4. இதனல் கிருஷ்ணன் இராமன் எவ்வளவு உயர்ந்த பதவி வகித்தான் என்பதை அறிய முடிகிறது.

இராஜராஜனின் தமக்கையான குந்தவை யார் தாராபுரத்தில் எடுத்த குந்தவை விண்ணகரம் எனும் திருக்கோயிலுக்கு கிருஷ்ணன் இராமன் நிர்வாக பொருப்பாளனக இருந்ததை தாராபுரம் கல்வெட்டு கூறுகிறது-5 திருநாகேஸ்வரம், திருவெண்காடு, திருமழபாடி போன்ற ஊர்களில் உள்ள கல்வெட்டுக்கள் வாயிலாக அவ்வூர் திருக் கோயில்களுக்கு கிருஷ்ணன் இராமன் செய்த அறப்பணிகளை அறியமுடிகிறது.

தஞ்சை பெருங்கோயிலில் அர்த்த நாரீஸ்வரர் (உமையொருபாகன்) திருமேனி ஒன்றை செம்பில் செய்வித்தான். இது மூன்று கரங்களைப்பெற்றுத் திகழ்ந்தது. ஒருகரம் மட்டும் உடைய இடப்புறம் உமையவள் பாகமாக உள்ளதால் இச்செம்புத்திருமேனியில் இப்பகுதி மட்டும் பித்தளை பூசப்பட்டுத் திகழ்ந்தது. இத்திருமேனி ரத்னன்யாசம் செய்யப்பட்டு, பீடத்தில் பதிக்கப்பட்டிருந் ததாக கல்வெட்டு கூறுகின்றது-6.

''பாதாதி கேசாந்தம் முக்காலே ஒருவிரல் உசரத்து ஈஸ்வரபாகம் இரண்டு ஸ்ரீ ஹஸ்தமும் உமாபாகம் ஒரு ஸ்ரீ ஹஸ்தமும், உமாபாகம் செம்பின்மேல் பித்தளை கொண்டு பூசிக் கனமாக எழுந்தருள்வித்த அர்த்த நாரீஸ்வரர் திருமேனி ஒன்று ''—என்று கூறும் கல்வெட்டால் திருமேனிகள் வார்ப்பதில் சில புதுமையான முறைகளை (ஒரு பகுதி மட்டும் பித்தளை பூசப்படுவது) கிருஷ்ணன் இராமன் செய்வித்தார் என்பது புதுமையான செய்தி களாகும்.

கிருஷ்ணன் இராமன் அளித்த செப்பு திருமேனிக்கு பல அணிகலன்களையும் அளித் தார். 121 முத்துக்கள், ஏழு குருமுத்துக்கள், பளிங்குவயிரம் பதினொன்றும் இழைக்கப்பட்ட ஸ்ரீ முடி ஒன்று, 10 குறுமுத்து 26 பளிங்கு வயிரம், ஏழு பொத்திகள் இழைக்கப்பட்ட திருமாலை, வீரப்பட்டம், பாஹீவஜயம், திரு உதரபந்தம், முப்பது பொற்பூக்கள், திருக்கைக் காரை திருவடிக்காரை, திருப்பட்டிகை போன்ற எண்ணிலா அணிகலன்களையும் அளித்துள்ள கிருஷ்ணன் இராமனின் கல் வெட்டுக்களை-7 நோக்கும் போது இவரது கலை உள்ளம் பற்றி அறியமுடிகிறது.

இராஜராஜன் காலத்தில் மும்முடி சோழப் பிரம்மராயன் என்றும், இராஜேந்திரன் காலத்தில் இராஜேந்திர சோழபிரம்ம மாராயன் என்றும் விருதுப் பெயர்கள் சூடிய கிருஷ்ணன் இராமனுக்கு, கிருஷ்ணன் கௌசலை-8, சரபன் தொண்டவை-9 என்ற இரு மனைவியர் இருந்தனர். இவரது மகனன கொற்றன் அருள்மொழி எனும் உத்தம சோழ பிரம்ம மாராயன் இராஜேந்திர சோழனிடம் அதிகாரி யாக பணிபுரிந்தான். கிருஷ்ணன் இராமன் பணி ஓய்வு பெற்றதும் ஜீவிதமாக ''செண்ணை நாடு'' என்ற பகுதியைப்பெற்ருர். கி.பி.1045ல் இவ்வாறு அளிக்கப்பட்ட ஜீவதப் பகுதியை முதல் இராஜாதிராஜன் உறுதி செய்தான் என்பதை கர்நாடக மாநில சங்கவரம் கல்வெட்டு-10 கூறுகிறது. இவ்வாறு சோழ அரசியலில் வாழ்வாங்கு வாழ்ந்த கிருஷ்ணன் இராமனின் செப்புத் திருமேனி ஒன்று தற்போது தஞ்சை கலைக்கூடத்திலிடம் பெற்றுள்ளது.

இச் செப்புப் பிரதிமம் திருவெண்காடு சுவேதாரண்யேஸ்வரன் திருக்கோயிலில் பிரகாரத்தில் புதையண்டிருந்து அண்மைக் காலத்தில் வெளிக் கொணரப்பட்ட ஒன்று. 70 செ. மீ. உயரமுடைய இந்த சிலை நின்ற கோலத்தில் இறைவனை வணங்கும் நிலையில் இடுப்பில் அரை ஆடையும், மார்பில் புரிநூலும் (யக்ஞோபவிதம்) தரித்து காணப்படுகிறது. வலது கை மணிக்கட்டில் மட்டும் ஓர் மணிமாலை உள்ளது. தலைமுடி மிக அலங் காரமாக்கப்பட்டு உச்சிவகிட்டில் சிகை முடியப் பட்டுள்ளது.

இச்சிலையை பற்றி ஆய்வு மேற்கொண்ட திரு. டி. என். இராமச்சந்திரன் அவர்கள் இதனை ஓர் பிரம்மமாராயன் சிலையாகக் குறித்துள்ளார். இவரது கருத்தை வலி யுறுத்தும் வண்ணம் திருவெண்காடு திருக் கோயிலில் கல்வெட்டொன்று உள்ளது-11. அதில் இராஜராஜனின் அதிகாரியான கிருஷ்ணன் இராமன் செய்த அறப்பணிகள் குறிக்கப்பட்டுள்ளது. மேலும், இத்திருக் கோயிலில் இராஜராஜன், இராஜேந்திரன், இராஜாதிராஜன் காலத்தில் வடிக்கப்பட்ட செப்புத் திருமேனிகளைப்பற்றி கல்வெட்டுக்கள் பேசுகின்றன. இவை அனைத்தும் உலகப் புகழ் வாய்ந்தவை. இத்திருமேனிகளெல்லாம் பல நூற்றாண்டுகளாக புதையுண்டு அண்மை யில் தோண்டி எடுக்கப்பட்டவை. (அனைத்தும் தஞ்சை கலைக்கூடத்திலுள்ள)

அம்மன்குடி ஸ்ரீ துர்காதேவியின் அருளில்
அகிலமெல்லாம் செழிக்க இறைஞ்சும்

பிரியா சில்க்ஸ்

பொற்றாமரை தென்கரை, கும்பகோணம்

அனைத்து ஜவுளிகளுக்கும் புதிய ஷோரூம்

With best compliments from

★

Gopalakrishna Agencies

Station Road, Papanasam

Dealers in:
Fertilisers, Pesticides, Hardware & Cement

Phone No. 48

இராஜராஜன், இராஜேந்திரன், இராஜாதிராஜன் காலத்தில் திருவெண்காட்டில் செப்புத் திருமேனி வடிக்கும் கலை உயர்நிலை எய்தியிருந்தது. இக்கால வரையரையில் வடிக்கப்பட்ட ஓர் பிரம்மாதிராஜனின் சிலை நிச்சயம் கிருஷ்ணன் இராமனின் சிலையாகத்தான் இருக்க முடியும். மேலும், தஞ்சையில் செப்புத் திருமேனி உருவாக்குவதில் (அர்த்தநாரீஸ்வரர்) சில புதிய முறைகளைச் செயல்படுத்திய கிருஷ்ணன் இராமனது உருவச் சிலையும் வெண்காட்டில் வடித்திருக்க வாய்ப்புகள் உள்ளன.

1) தஞ்சை பெருவுடையார் கோயில் கல்வெட்டுக்கள் — இரா. நாகசாமி — பக்கம் — 139

2) S. I. I. vol II page 162.

3) Larger Laiden grants. Copper plates.

4) கல்வெட்டுத் தேன்துளிகள் — வெ. மகாதேவன் — பக்கம் — 4.

5) 10 of 1918.

6) S. I. I. vol II pages 162, 166.

7) தஞ்சை பெருவுடையார் கோயில் கல்வெட்டுக்கள்.

8) S. I. I. vol. V No. 636, 78 of 1895.

9) 256 of 1921.

10) 171 of 1911.

11) S. I. I. vol. V.

—திரு. குடவாசல் பாலசுப்ரமணியன்

WITH BEST COMPLIMENTS FROM

AUTO ANCILLARIES

Mfrs. MOPED ACCESSORIES, KUMBAKONAM.

WITH BEST COMPLIMENTS FROM

NEW MEDICAL CENTRE

23, NAGESWARAR EAST STREET, KUMBAKONAM

WITH BEST COMPLIMENTS FROM

SRI JAYALAKSHMI SILKS

Silk Sarees Manufacturers,
25, GANDHI ROAD, KUMBAKONAM-612001.

WITH BEST COMPLIMENTS FROM

POWER LIGHT SOAP FACTORY

GANDHI ADIGAL SALAI, KUMBAKONAM.

QUALITY PRINTERS, BINDERS, STATIONERIES

MURUGAN PRINTING PRESS

25, THIRD STREET, ROYAPETTAH HIGH ROAD, MADRAS-600004
Phone : 74550

பூபேஸ் வாழை இலை வியாபாரம்

(சில்லரை & மொத்த வியாபாரம்)

ஸ்டால் நெ. 8, 9, 10, 11, 12 பனகல் காய்கரி மார்கெட், தி.நகர், சென்னை-600017

உரிமையாளர் : முகவை குறிச்சி S. பழனிச்சாமி தேவர்

With Best Compliments from

G. R. THANGA MALIGAI

JEWELLERY

104, USMAN ROAD

T. NAGAR, MADRAS-600 017

WITH BEST COMPLIMENTS FROM

Vincent (Madras) Bottlers (P) Ltd.

107 Gengu Reddy Road

MADRAS-600 007

With best compliments from

Madras Elastomers Limited

No. 64, STERLING ROAD

NUNGAMBAKKAM, MADRAS-600 034

Phone : 478746, 472816

Leading Rubber Technologists and Manufacturers of 'Melsure' Brand Solid and Cushion Tyres for all Models of Fork Lift Trucks, Wear Resistant Rubber Liners and other Critical and Safety Rubber Components for all the Railways, Defence, Automotive, Mining and General Engineering Industries.

With Best Compliments

from

M/s. Lakshmi Engineering Industries

BHEL / IBR HIGH PRESSURE PIPING FABRICATORS

Works :

86/2, Ayyencheri
Urappakkam, Gudvancheri
Chingleput Dist 603 202

Office :

B-1, Kamakoti Nagar
20/1, Rameswaran Road
T. Nagar, Madras-600 017

Phone Office : 447405
Works : 62

With best complements from:

SIRIL MOORTHY

LODGE MALAYSIA

MADRAS-1

உ

ஸ்ரீராமஜயம்

ஓம் தும் துர்காயை நம :

தேவி தபோவனம் என்கிற அம்மங்குடி

ஸ்தல வரலாறு

சோழநாடு சோறுடைத்து என்பர். உணவு மாத்திரம் போறுமா? சோழ நாடு பல புண்ணிய ஸ்தலங்களும் தீர்த்தங்களும் கொண்ட நாடாகும். புண்ணிய காவிரி நதியால் பேறு பெற்ற நாடாகும். இம்மைக்கும் மறுமைக்கும் பேறு செய்யும் நாடாகும்.

இந்த பிரதேசத்தில் பல புண்ணிய ஸ்தலங்களில் தேவிக்கு உகந்த தலை சிறந்த க்ஷேத்திரங்களில் ஸ்ரீதுர்கைக்கு ஏற்பட்ட க்ஷேத்திரமான அம்மன்குடியும் ஒன்று. இங்குள்ள துர்கா க்ஷேத்திரம் யுகாந்திரங்களாக பெருமை வாய்ந்ததாகும். ஸ்தலம், மூர்த்தி, தீர்த்தம், விருக்ஷம் முதலியவைகளால் மகா புகழ் பெற்றது. பிரம்ம: (தேவி நாரத சம்வாதமாய்) கைவர்த்த மஹா புராணத்திலும், ஸ்காந்த மஹா புராணத்திலும் இந்த க்ஷேத்திரத்தின் மகிமை விரிவாய் கூறப்பட்டுள்ளது. இங்கு ஸ்ரீதுர்கா தேவி, ஸ்ரீகைலாச நாதர், ஸ்ரீ பார்வதி, ஸ்ரீதபஸ் விக்ன ஹர விநாயகர், ஸ்ரீசூரியன் ஆகிய தேவதைகளை பிரதிஷ்டை செய்து தபஸ் செய்ததை இப்புராணங்கள் கூறும்.

பிரும்ம: கைவர்த்த புராணத்தில் லீலா விலாச விபினம் என்ற துர்கா புர மகாத்மியம் பரமேச்வரன் உமாதேவிக்கு எடுத்து உரைத்ததான சகல பாவங்களிலிருந்தும் விடுவிக்கும் ஸகல க்ஷேமங்களையும் கொடுக்கும் ஸ்ரீதுர்கா தேவியின் பரிபூர்ண அநுக்கிரஹத்தை அளிக்க வல்லதுமான சரித்திரம் நைமிசாரண்யர் வாசிகளான மகரிஷிகளால் பிரார்த்திக்கப்பட்டு ஸ்ரீசூத புராணிகரால் விஸ்தாரமாக எடுத்துரைக்கப்பட்டு இருக்கிறது.

புராணிகர், ஸ்ரீபார்வதி தேவி பரம சிவனிடம் ஸர்வ லோகத்திற்கும் ஸகல க்ஷேமத்தையும் அளிக்கவல்ல துர்காம்பிகையினுடைய வைபவத்தைக் கூறி எந்த மிக புண்யம் வாய்ந்த க்ஷேத்திரத்தில் மஹிஷா ஸுரமர்த்தினி ஆனந்திக்கப்பட்டவளாய் ஸகல விதமான சிரேயஸை யும் அடைந்து பிறருக்கும் அளிக்க வல்லவளாய் இருக்கிறாள், அதை தாங்கள் எனக்கு கூற வேண்டும். நான் அங்கு சென்று அவளை தரிசிக்க வேண்டும் என்று வினவ தேவேசன் ஸ்ரீ துர்காம்பிகைக்கு மஹிஷா ஸுரவதத்தினால் அவள் தேஹத்தில் ஏற்பட்ட தாபத்தை பாடலீவனம் என்கிற க்ஷேத்திரத்தில் தன்னை (தேவேசனை) விதிப்படி பூஜித்து நிவர்த்தித்துக் கொண்டதையும் அந்த க்ஷேத்திர மகிமையையும் விஸ்தாரமாய் எடுத்துரைத்தார் என்பதை கூறினார். அதன் மீது மஹரிஷிகள் மறுபடியும் ஸ்ரீசூதபுராணிகரை நோக்கி எந்த துர்கா தேவியை ஸகல ஜனங்களும் பிரீதி செய்து ஸகல அபீஷ்டங்களையும் பெற்றார்களோ அந்த துர்காதேவிக்கு மஹிஷா ஸுரவதத்தினால் என்ன தோஷம் ஏற்பட்டது என்பதை விபரமாய் கூறவேண்டும் என பிரார்த்திக்க அவர் கூறுகிறார். லவணண் என்கிற மஹா கொடிய அசுரன் தேவர்களையும் நரர்களையும் மிகக் கொடுமைப் படுத்தினான். அவனால் அவனைக் காட்டிலும் கொடுமை வாய்ந்த மஹிஷாசுரன், சும்பன் நிசும்பன் சிம்மவக்த்ரன் தூம்ரலோசனன் மதுகைடபன், சண்டமுண்டன் ரக்தபீஜன் முதலிய அசுரர்கள் உற்பத்தி செய்யப் பெற்றார்கள்.

எல்லோருக்கும் முதலில் பிறந்த மஹிஷா ஸுரன் இந்த கொடிய அரக்கர் குழாம் சூழ கடும்தவம் புரிந்து ஸ்ரீசங்கரனிடமிருந்து பல வரங்களைப் பெற்று, தன்னை யாரும் ஜெயிக்க முடியாத வரன்களையும் அடைந்து மூன்று லோகங்களிலும் உள்ள ரிஷிகளையும், ஸாது ஜனங்களையும் ஸ்த்ரீகளையும் மேலும் மேலும் மஹிஷாஸுரனும் அவன் கூட்டமும் ஹிம்ஸித்தார்கள் இந்திரன் முதலானோரை பதவி இழக்கச் செய்தும் மற்ற விதங்களிலும் கொடுமை படுத்தினார்கள். இதைப் பொறுக்க முடியாத தேவர்கள் பிரும்மா முதலியோர்

Best wishes from

M/s. South India Steel Centre

41-B, Raghunayakulu Street

MADRAS-600 003

Phone : 564415

Phone : 661361

With best compliments from

FRUITNIK

- MANGO
- PINEAPPLE
- GRAPE

Mfs. Siva's Beverages

172, Poonamallee High Road
MADRAS-600 010

WITH BEST COMPLIMENTS FROM

Senthil Agencies

Enmeena Enterprises

54-A, Banadurai North Street
KUMBAKONAM

களுடன் ஆலோசித்து முடிவே ஒன்றும் தெரியாமல் முப்பத்து முக்கோடி தேவர்களுடன் ஸ்ரீதுர்க்கையை சரணடைந்து துக்கத்தை துடைக்க எண்ணம் கொண்டார்கள். வேறு எவராலும் ஆகாது எனத் தீர்மானித்த அவர்கள் முப்பெரும் தேவர்களோடும் கைலாச பர்வதத்தில் 18 கோடி கனங்களால் சேவிக்கப் படும் ஸ்ரீஸிம்மவாஹினியை பக்தியுடன் பாதத் தில் சரணடைந்து இவ்வாறு துதிக்கலானுர்கள்.

நமஸ்தே தேவி கல்யாணி
நமஸ்தே பக்த வக்தஸலே
நமோம்பிகே ஜகன்மாத :
நமோ வேதாந்த வேதினி
நம காருண்ய தேஹாயை
நம த்ரிநயனப்ரியே
நமஸ்தே சூல ஹஸ்தாயை
ஸர்வ தேவாயை நமோ நம :
மஹிஷா ஸுர பீதானும்
அஸ்மாகம் ரக்ஷிணும் க்ருபாம்
குரு கல்யாணி தேவேசி
பக்த ரக்ஷண ததிபரே.

இப்படி துதிக்கப்பட்ட துர்காதேவி யானவள் அவர்கள் துக்கத்தை போக்க எண்ணம் கொண்டு இனிமையான புன்சிரிப் புடன் ப்ரும்மாதி தேவர்களுக்கு அபயம் அளித்து அசுரனை அழித்து அகிலத்தை காக்க அனுக் ரஹித்தாள். அசுரன் அழியப் போவதால் அவர்களும் ஆனந்தத்துடன் சென்ருர்கள்.

பிறகு பெருத்த சிம்மத்தில் ஏறி கோடி கன்னிகைகள் புடைசூழ கஜவக்த்ரன், வீரபத்ரன், பைரவன், சாமுண்டி பத்ரகாளி மற்றும் ஏழு மாத்ருகணங்களுடனும் இந்திராதி தேவர்களோடும். 18 கணங்களும் புடைசூழ மஹிஷாஸுரனை நோக்கி கிளம்பினுள்.

ஏழு பிராகாரங்களும், ஐந்து வாயில்களும், கோடி சிவாலயங்களும், மூன்று கோடி அரச மாளிகைகளும், இரண்டு லக்ஷம் வீதிகளும் கொண்ட பதினுயிரம் அகழிகளால் சூழப்பட்ட மஹிஷபுரத்தில் 16 கோடி அசுரர்களால் சூழப்பட்டு இரத்தின மண்டபத்தில் இருந்த மஹிஷாஸுரனை கொம்பை பிடித்து இழுத்து துவந்தயுத்தம் செய்யலானுள். கோபங் கொண்டு துர்கையை கொல்ல நினைத்த அசுரனை கோபங்கொண்ட துர்காதேவி சர்வ ப்ராணங்களினுலும் ஜ்வலிக்கும் தேஹத்தோடு புருவத்திலேற்றிய கண்களோடு இடது கையால் தலையைப் பிடித்து, காலினுல் தேஹத்தை மிதித்து, வலது கையிலுள்ள சூலத் தினுல் வதம் செய்தாள்.

அந்த அசுரவதத்தினுல் தேஹத்தில் ஏற்பட்ட தாபத்தை தணிக்க தேவேசனை சரணடைந்து துதிக்கலானுள்.

ஹே தேவா என்னுடைய சரீரத்தில் மஹிஷாசுரவதத்தினுல் ஏற்பட்ட தாபத்தின் கொடுமையை தணிக்க என்ன செய்வேன்? எங்கு செல்வேன்? தாங்களே போக்கவல்லவர். தங்களை சரணடைந்தேன். அனுக்ரஹிக்க வேண்டும் என்று வேண்ட ஈசுவரன் ஹே! கல்யாணி! உன்னுல் தேவகாரியம் செய்யப் பட்டது. பயத்தை விடு. புண்ய தீர்த்தாடனத் தினுலும், க்ஷேத்திராடத்தினுலும் தாபம் தீரும் பூமிக்கு சென்று இவைகளை செய்வாயாக என அருளினுர். அதன் பிரகாரம் தேவி பிரயாகை காசி சென்று விதிப்படி ஸ்நானம் செய்து விஸ்வேஸ்வர பூஜை செய்து பிறகு ஹரித்வாரம் முதலிய பல பல புண்ணிய தீர்த்த கட்டங்களில் ஸ்நானம் செய்து பல புண்ணிய க்ஷேத்திரங் களையும் தரிசித்து தென்திசை அடைந்து காளஹஸ்தி காஞ்சி க்ஷேத்திரங்களையும் தரிசித்து விருத்தாஜலம், வைத்தியநாதம், காளீபுரம் ஸ்வேதவனம் சாயாவனம் வழியாக காவேரிதீரம் அடைந்து மேற்குபுறம் திரும்பி மாயூரம் முதலிய பல க்ஷேத்திரங்களை தரிசித்து மத்யார்ஜுனம் அடைந்து நாகேஸ்வரம் வழியாக சிவபுரம் சென்று கும்பகோணம் அடைந்து பின் சுவாமிமலை வழியாக தென் பாகம் திரும்பி பஞ்சநதக்ஷேத்ரம் கிருதேஸ்வரம் ஸ்ரீகண்டம் அடைந்தாள். காசிக்கு ஈடான ஸ்ரீவாஞ்சியம் கௌதமேஸ்வரபுரம் அடைந்து கௌதம ரிஷியால் சொல்லப்பட்ட ஸ்தலவாசம் முதலிய செய்து பாடலீவனத்தை அடைந்தாள். சில தினங்கள் இங்கு தங்கி புகழ்பெற்ற விருஷப தீர்த்தத்திலிருந்து உண்டான ஹரிநதி (அரசலாறு) தீர்த்தம் சென்று மஹா சந்தோ ஷம் அடைந்து ஹரி நதியில் சங்கல்ப ஸ்நானம் செய்து அதைக் காட்டிலும் புண்ணியமான பிர்ம தீர்த்தம் தேவ தீர்த்தம் பாபவிநாச தீர்த்தத்தில் ஸசேல ஸ்நானம் செய்து ஜோதிர்மய மஹாலிங்கத்தை தனது சாந்திக் காக பக்தியோடு பஞ்சாமிர்தம், பஞ்சகவ்யம் இளநீர், சந்தனம் பால் நெய் தேன் கரும்பு ரஸம் முதலியவைகளால் மஹா அபிஷேகம் செய்து பாலன்னம் முதலிய பலவித அன்னங்களை தேவேசனுக்கு அர்ப்பித்து விதி முறைப்படி ஸ்தோத்திரம் 1008 பிரதிக்ஷணம் செய்து நமஸ்கரித்து, பாபவிநாச தீர்த்தத்தில் தன்னுடைய பெயரால் கங்காதி முதலிய எல்லா தீர்த்தங்களையும் ஆவாஹனம் செய்து, மூன்று வேளையும் ஸ்நானம் செய்து, பஞ்சா க்ஷரம் ஜபம் செய்து தபஸ் செய்து வந்தாள்.

PRADEEP DRUG COMPANY

MANUFACTURERS OF BULK DRUGS

Viz.

Ethambutol Hydrochloride IP,

Chloromphenicol IP,

Erythromycin Stearate IP,

Magaldrate USP, Mebendazole USP.

Office:

268, LLOYDS ROAD
MADRAS-600 014

Phone: 476261 & 478973

Factory:

A 9 & 10 SIDCO INDL ESTATE
MARAIMALAI NAGAR
CHINGLEPUT DISTRICT

Phone: 95

ஸ்ரீ:

ஸ்ரீ துர்கா அஷ்டோத்தர சதநாமாவளி:

ஓம் மாஹேச்வர்யை நம:
மஹாதேவயை
ஜயந்த்யை
ஸர்வமங்களாயை
லஜ்ஜாயை
பகவத்யை
வந்த்யாயை
பவான்யை
பாபநாசின்யை
சண்டிகாயை
காளராத்ர்யை
பத்ரகாள்யை
அபராஜிதாயை
மஹாவித்யாயை
மஹாமேகாயை
மஹாமாயாயை
மஹாபலாயை
காத்யாயன்யை
ஜயாயை
துர்க்காயை
மந்தாரவனவாஸின்யை
ஆர்யாயை
கிரிஸுதாயை
தாத்ர்யை
மஹிஷாசுரகாதின்யை
ஸித்திதாயை
புத்திதாயை
நித்யாயை
வரதாயை
வரவர்ணின்யை
அம்பிகாயை
ஸுகதாயை
ஸெம்யாயை
ஜகத்மாத்ரே
சிவப்ரியாயை
பக்தஸந்தாப ஸம்ஹர்த்ர்யை
ஓம் ஸர்வகாமபரிபூரிண்யை நம:
ஜகத்கர்த்ர்யை
ஜகத்தாத்ர்யை
ஜகத்பாலன தத்பராயை
அவ்யக்தாயை
வ்யக்தரூபாயை
பீமாயை
திரிபுரஸுந்தர்யை
அபர்ணாயை
லலிதாயை
வேத்யாயை
பூர்ணசந்த்ரநிபாநநாயை
சாமுண்டாயை
சதுராயை
சந்த்ராயை
குணத்ரயவிபாவிந்யை
ஹேரம்பஜனன்யை
காள்யை
த்ரிகுணாயை
கீர்த்திதாரிண்யை
உமாயை
கலசஹஸ்தாயை
தைத்யதர்பநிஷூதிந்யை
புத்த்யை
காந்த்யை
க்ஷமாயை
சாந்த்யை
புஷ்ட்யை
துஷ்ட்யை
த்ருத்யை
மத்யை
வராயுததராயை
தீராயை
கெளர்யை
சாகம்பர்யை
சிவாயை
ஓம் அஷ்டஸித்திப்ரதாயை நம:
வாமாயை
சிவவாமாங்கவாஸின்யை
தர்மதாயை
தனதாயை
ஸ்ரீதாயை
காமதாயை
மோக்ஷதாயை

அபராயை
சித்ஸ்வருபாயை
சிதாநந்தாயை
ஜயச்ரியை
ஜயதாயின்யை
சர்வமங்களமாங்கள்யாயை
ஜகத்த்ரயஹிதைஷிண்யை
ஸர்வாண்யை
பார்வத்யை
தன்யாயை
ஸ்கந்தமாத்ரே
ஓம் அகிலேச்வர்யை நம :
ப்ரபன்ஞர்திஹராயை
தேவ்யை
ஸுபகாயை

காமருபிண்யை
நிராகாராயை
ஸாகாராயை
மஹாகாள்யை
ஸுரேச்வர்யை
சர்வாயை
ச்ரத்தாயை
த்ருவாயை
க்ருத்யாயை
ம்ருடான்யை
பக்தவத்ஸலாயை
ஸர்வசக்திஸமாயுக்தாயை
சரண்யாயை
ஸர்வகாமதாயை
ஸ்ரீ துர்காபரமேச்வர்யை நம:
ஸ்ரீ துர்காஷ்டோத்தர சதநாமவளிஸம்பூர்ணம்

॥ श्री ॥

॥ श्रीदुर्गाष्टोत्तरशतनामावलिः ॥

ओं माहेश्वर्यै नमः
महादेव्यै
जयन्त्यै
सर्वमङ्गळायै
लज्जायै
भगवत्यै
वन्द्यायै
भवान्यै
पापनाशिन्यै
चण्डिकायै १०

कालरात्र्यै
भद्रकाल्यै
अपराजितायै
महाविद्यायै
महामेधायै
महामायायै
महाबलायै
कात्यायन्यै
जयायै
दुर्गायै २०

मन्दारवनवासिन्यै नमः
आर्यायै
गिरिसुतायै
धात्र्यै
महिषासुरघातिन्यै
सिद्धिदायै
बुद्धिदायै
नित्यायै
वरदायै
वरवर्णिन्यै ३०

अम्बिकायै
सुखदायै
सौम्यायै
जगन्मात्रे
शिवप्रियायै
भक्तसंतापसंहर्त्र्यै
सर्वकामप्रपूरिण्यै
जगत्कर्त्र्यै
जगद्धात्र्यै
जगत्पालनतत्परायै ४०

अव्यक्तायै नमः
व्यक्तरूपायै
भीमायै
त्रिपुरसुन्दर्यै
अपर्णायै
ललितायै
वेद्यायै
पूर्णचन्द्रनिभाननायै
चामुण्डायै
चतुरायै ५०

चन्द्रायै
गुणत्रयविभाविन्यै
हेरम्बजनन्यै
काल्यै
त्रिगुणायै

कीर्तिधारिण्यै
उमायै
कलशहस्तायै
दैत्यदर्पनिषूदिन्यै
बुद्ध्यै ६०

कान्त्यै
क्षमायै
शान्त्यै
पुष्टयै
तुष्टयै
धृत्यै
मत्यै
वरायुधधरायै
धीरायै
गौर्यै ७०

शाकंभर्यै
शिवायै
अष्टसिद्धिप्रदायै
वामायै
शिववामाङ्गवासिन्यै
धर्मदायै नमः
धनदायै
श्रीदायै
कामदायै
मोक्षदायै ८०

अपरायै
चित्स्वरूपायै
चिदानन्दायै

जयश्रियै
जयदायिन्यै
सर्वमङ्गळमाङ्गल्यायै
जगत्रयहितैषिण्यै
शर्वाण्यै
पार्वत्यै
धन्यायै ९०

स्कन्दमात्रे
अखिलेश्वर्यै
प्रपन्नार्तिहरायै
देव्यै
सुभगायै
कामरूपिण्यै
निराकारायै
साकारायै
महाकाल्यै
सुरेश्वर्यै १००

शर्वायै
श्रद्धायै
ध्रुवायै
कृत्यायै
मृडान्यै
भक्तवत्सलायै
सर्वशक्तिसमायुक्तायै
शरण्यायै
सर्वकामदायै
श्रीदुर्गापरमेश्वर्यै

ஸ்ரீவனதுர்க்கா ஆபதுத்தராஷ்டகம்

நமஸ்தே சரண்யே சிவே ஸானுகம்பே
நமஸ்தே ஜகத்வ்யாபிகே விச்வரூபே !
நமஸ்தே ஜகத் வந்த்ய பாதாரவிந்தே
நமஸ்தே ஜகத்தாரிணி த்ராஹி துர்க்கே !!

நமஸ்தே ஜகத்சிந்த்யமான ஸ்வரூபே
நமஸ்தே மஹாயோகி விஞ்ஞான ரூபே !
நமஸ்தே நமஸ்தே ஸதானந்த ரூபே
நமஸ்தே ஜகத்தாரிணி த்ராஹி துர்க்கே !!

அநாதஸ்ய தீனஸ்ய த்ருஷ்ணாதுரஸ்ய
பயார்த்தஸ்ய பீதஸ்ய பத்தஸ்ய ஜந்தோ !
த்வமேகா கதிர் தேவி நிஸ்த்தார கர்த்ரீ
நமஸ்தே ஜகத்தாரிணி த்ராஹி துர்க்கே !!

அரண்யே ரணே தாருணே சத்ருமத்யே
ஜலே ஸங்கடே ராஜகேஹே ப்ரவாதே !
த்வமேகா கதிர்தேவி நிஸ்தாரஹேதுர்
நமஸ்தே ஜகத்தாரிணி த்ராஹி துர்க்கே !!

அபாரே மஹாதுஸ்தரே த்யந்தகோரே
விபத்ஸாகரே மஜ்ஜதாம் தேஹபாஜாம் !
த்வமேகா கதிர்தேவி நிஸ்தாரநௌகா
நமஸ்தே ஜகத்தாரிணி த்ராஹி துர்க்கே !!

நமச்சண்டிகே சண்டதோர்த்தண்ட லீலா
ஸமுத்கண்டிதா கண்டலாசேஷ சத்ரோ : !
த்வமேகாகதிர் விக்ன ஸந்தோஹ ஹர்த்ரீ
நமஸ்தே ஜகத்தாரிணி த்ராஹி துர்க்கே !!

த்வமேகா ஸதாராதிகா ஸத்யவாதின்
யநேகாகிலா க்ரோதனு க்ரோதநிஷ்டா :
இடாபிங்கலாத்வம் ஸுஷும்நா ச நாடீ :
நமஸ்தே ஜகத்தாரிணி த்ராஹி துர்க்கே !!

நமோதேவி துர்க்கே சிவே பீமநாதே
ஸதா ஸர்வஸித்திப்ரதாத்ரு ஸ்வரூபே !
விபூதி : ஸதாம் காலராத்திரி ஸ்வரூபே
நமஸ்தே ஜகத்தாரிணி த்ராஹி துர்க்கே !!

சரணமஸி ஸுராணாம் ஸித்தவித்யாதராணாம்
முனிதனுஜவராணாம் வ்யாதிபி : பீடிதாணாம் !
த்ருபதிக்ருஹ கதானாம் தஸ்புபிஸ் த்ராஸிதானாம்
த்வமஸி சரணமேகா தேவிதுர்க்கே ப்ரஸீத !!

|| ஶ்ரீ: ||

துர்கா ஸப்தசதி (முக்யமான மந்த்ரங்கள்)

(கீழே தரப்பட்டுள்ள சில ஶ்லோகங்கள் துர்காஸப்தஶதியி லுள்ள சக்தி வாய்ந்த மந்த்ரங்கள் சில. இவைகளை உச்சாரணம் செய்வதால் பாபங்களிலிருந்தும்,வியாதிகளிலிருந்தும் காப்பாற்றப் படுவோம். ஆயுள், ஆரோக்யம், ஐச்வர்யம், தனதான்ய ஸம்ருத்தி, புத்ர ஸந்தானம், ஞானம் முதலியன உண்டாகும்.)

1. தேவ்யா யயா ததமிதம் ஜகதாத்ம ஶக்த்யா
நிஶ்ஶேஷ தேவகண சக்தி ஸமூஹ மூர்த்யா ।
தாமம்பிகாம் அகில தேவ மஹர்ஷிபூஜ்யாம்
பக்த்யா நதா : ஸ்ம விததாது ஶுபானி ஸா ந : ||

2. யஸ்யா : ப்ரபாவ மதுலம் பகவா நநந்தோ
ப்ரஹ்மா ஹரஶ்ச நஹி வக்துமலம் பலம் ச ।
ஸா சண்டிகாऽகில ஜகத் பரிபாலனாய
நாஶாய சாஶுபபயஸ்ய மதிம் கரோது ||

3. விச்வேச்வரி த்வம் பரிபாஸி விச்வம்
விச்வாத்மிகா தாரயஸீதி விச்வம் ।
விச்வேஶ வந்த்யா பவதீ பவந்தி
விச்வாச்ரயா யே த்வயி பக்திநம்ரா : ||

4. தேவி ப்ரபன்னார்த்திஹரே ப்ரஸீத
ப்ரஸீத மாதர் ஜகதோऽகிலஸ்ய ।
ப்ரஸீத விச்வேச்வரி பாஹி விச்வம்
த்வமீச்வரீ தேவி சராசரஸ்ய ||

5. தேவி ப்ரஸீத பரிபாலய நோऽரிபீதே :
நித்யம் யதா ஸுரவதா ததுநைவ ஸத்ய : ।
பாபானி ஸர்வ ஜகதாம் ப்ரஶமம் நயாஶு
உத்பாத பாக ஜனிதாம்ஶ்ச மஹோபஸர்கான் ||

6. தே ஸம்மதா ஜனபதேஷு தநானி தேஷாம்
தேஷாம் யஶாம்ஸி ந ச ஸீததி தர்மவர்க : ।
தந்யாஸ் த ஏவ நிப்ருதாத்மஜ ப்ருத்யதாரா :
யேஷாம் ஸதாப்யுதயதா பவதீ ப்ரஸன்னா ||

7. வித்யாஸ் ஸமஸ்தாஸ் தவ தேவி பேதா :
ஸ்த்ரிய : ஸமஸ்தா : ஸகலா ஜகத்ஸு ।
த்வயைகயா பூரித மம்பயைதத்
கா தே ஸ்துதி : ஸ்தவ்யபரா பரோக்தி : ||

8. த்வம் வைஷ்ணவீ சக்திரனந்த வீர்யா
விச்வஸ்ய பீஜம் பரமாஸி மாயா ।
ஸம்மோஹிதம் தேவி ஸமஸ்த மேதத்
த்வம் வை ப்ரஸந்நா புவி முக்திஹேது : ||

9. சூலேன பாஹி நோதேவி
பாஹி கட்கேன சாம்பிரித ।
கண்டாஸ்வநே ந : பாஹி
சாமஜ்யாநி ஸ்வநே ந ச ||

அறிவுள்ளவன் யார்?

தற்பெருமையின்மை, பிறர் மதிப்பதற்கெனவே தன் ஆசாரங்களை வெளிப்படுத்தும் டம்பமற்றிருப்பது, மனவாக்காயங்களால் பிறரைத் துன்புறுத்தாமை, பொறுமை, நேர்மை, குரு ஸேவை, தூய்மை, எதிர்ப்பு வலுத்தாலும் தன் நிலை புரளாமை, தன்னடக்கம், பற்றின்மை, அகங்காரமின்மை, பிறப்பு, இறப்பு, மூப்பு, நோய், துக்கம் என வாழ்வில் தொடரும் கேடுகளைப் பற்றி ஆராய்வது, தான், தன்னைச் சார்ந்தவன் எதிலும் இணைந்து அவற்றின் சுக துக்கங்களால் பாதிப்புறுவதிலிருந்தும் மீள்வது சுகதுக்கங்களைச் சம நிலையில் ஏற்பது, மகிழ்ச்சியும் கவலையும் கொள்ளாதிருப்பது. இறைவன் திருவடி சேவையில் ஈடுபாடு, விஷய சுக ஈடுபாடுள்ளவர்களுடன் கலவாது தனித்திருத்தல், ஆத்மஞான ஸாதனத்தில் ஈடுபாடு இவை அறிவின் அடையாளம்.

—பகவத்கீதை 13

உருவமும் அருவமும்

(ஜகத்குரு காஞ்சி காமகோடி பீடம் ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள்

ஐந்து இந்திரியங்களையும் அவை கிரகிக்கிற வஸ்துக்களையும் படைத்து, ஒழுங்கு செய்து வைத்த ஒரு பெரிய அறிவு இருக்கவே செய்கிறது. அதைத்தான் கடவுள் என்கிறோம். மின்சாரத்தைப் போல அதுவும் எங்கும் வியாபித்திருக்கிறது. நமக்குள்ளும் வ்யாபித்திருக்கிறது. இந்திரியங்கள் அதிலிருந்து தோன்றி அது இயக்கி வைக்கிற முறையில் கட்டுப்பட்டே வேலை செய்கின்றன. கண்ணால் பார்க்கத்தான் முடிகிறது: கேட்க முடிவதில்லை. காதால் கேட்கத்தான் முடிகிறது. பார்க்க முடிவதில்லை. இப்படியாக எந்தப் பெரிய சக்திக்கு இந்த இந்திரியங்கள் கட்டுப்பட்டிருக்கின்றனவோ, அந்த மகாசக்தி இந்த இந்திரியங்களுக்குக் கட்டுப்படுமா? இதனால் தான் கடவுளை எந்த இந்திரியத்தாலும் புரிந்து கொள்ள முடியவில்லை. இதைக் கொண்டு கடவுளே இல்லை என்கிறார்கள் சிலர்.

கடவுள் மகாசக்தி படைத்தவர் மட்டுமல்ல; பரம காருண்யமும் பொருந்தியவர். கடவுள் இல்லை என்று வாதம் செய்கிறவர்களிடம் தம்மை நிரூபித்துக் கொள்வதற்காக அவர் உருவம் எடுத்து

